வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 11.04.2024 வியாழக்கிழமை | இதழ் : 102 | பக்கங்கள் : 12




# இலங்கையின் நம்பிக்கையான பங்காளியாக இந்தியா இருக்கும்!

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா



கொழும்பு, ஏப்ரல் 11

**இலங்கையின் மிகவும் நம்பகமான நண்பனாகவும் - பங்காளியாகவும் இந்தியா இருக்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இந்தியா - இலங்கை பாதுகாப்புக் கருத்தரங்கில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“எங்கள் இரு தரப்பு ஒத்துழைப்பு விரிவடைந்து பன்முகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் வளர்ந்து வரும் தேசிய திறன்களால் இது வலுப்பெற்றுள்ளது. உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பு, ஆழமான பொருளாதார ஈடுபாடு, வர்த்தகம், முதலீடு, கலாசாரம், கல்வி, சுற்றுலா மற்றும் மக்களிடம் உள்ள பல்வேறு துறைகளில் நாங்கள் இப்போது ஒத்துழைக்கிறோம்.

“இந்தியா - இலங்கை ஒத்துழைப்பு என்பது

11

# நல்ல அறிவாற்றலுடையோர் இனவாதம் பரப்புவதில்லை

## என்கிறார் சஜித் பிரேமதாஸ

புத்தளம், ஏப்.11

“நல்ல அறிவாற்றல் வாய்ந்த பெரும்பாலானோர் இனவாதம், மதவாதத்தைப் பரப்புவதில்லை - இனவாதத்துக்கு துணை போவதும்இல்லை”, என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய தொழிலாளர் வளத்தைக் கொண்ட மையமாக நமது நாடு மாற்றப்பட வேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் கல்வி மிகவும் முக்கியமானது என்பதால், ஐக்கிய மக்கள் சக்தி தற்போது நாட்டில் கல்வி வலுவூட்டலை மேற்கொண்டு வருகிறது.

கல்வி மூலம் உருவாகும் அறிவாற்றலில் இருந்து உயர்வாக சிந்திக்க ஒவ்வொருவரும் முனைய வேண்டும். சிந்தனை ஆற்றலே புதிய விடயங்களுக்கு வழிவகுக்கும்.

அரசமைப்புச் சட்டம் “ஒருமித்த“ என்று குறிப்பிடப்பட்டாலும், நாட்டில்

11

# இலங்கையின் இறைமையை பாதுகாக்க அமெரிக்கா ஆதரவு!

## பாதுகாப்பு ஆலோசகர் சல்லிவன் உறுதி

கொழும்பு, ஏப்ரல் 11

இலங்கையின்இறைமை மற்றும் பாதுகாப்புக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்குமென ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று நடந்த தொலைபேசி உரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன. இதன்போது, விரைவான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளை ஜேக் சல்லிவன் பாராட்டினார்.

அத்தோடு, சர்வதேச நாணய

11

# நெடுந்தீவு முன்னேற்றத்துக்கு விசேட நிதியை பெற முயற்சி!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஏப். 11

நெடுந்தீவு பிரதேச மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விசேட நிதியை பெற முயற்சிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நெடுந்தீவின் பிரதான வீதி புனரமைப்பு, சாராப்பிட்டி நன்னீர் நிலைகளை தொடர்ச்சியாக பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை, பனை சார் உற்பத்திகளை பதனிடும்

11

# திங்கட்கிழமை பொதுவிடுமுறை

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் 15ஆம் திகதி - திங்கட்கிழமையை பொது விடுமுறை தினமாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு மறுதினமான எதிர்வரும் திங்கட்கிழமையை பொது விடுமுறை தினமாக அறிவிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

இதைத் தொடர்ந்தே, திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ)

# அமைதிவழி போராட்டங்களை நசுக்குவதை நிறுத்த வேண்டும்!

## அரசை வலியுறுத்தும் மன்னிப்பு சபை

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் அமைதி வழியில் நடத்தப்படும் போராட்டங்களை நசுக்குவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

2022 மார்ச் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நடைபெற்ற 30 போராட்டங்களில், போராட்டக்காரர்களுக்கு எதிராக படைத் தரப்பினர் அதிக பலத்தை பிரயோகித்தனர் என்று அந்த அமைப்பின் புதிய அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

11

# நாட்டில் அமைதியை குழப்ப சிலர் தாக்குதல் சதி முயற்சி!

## பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

## புதுவருடத்தில் பாதுகாப்பு விரைவாக மாறலாம்

கொழும்பு, ஏப். 11

பொது அமைதியின்மையை தூண்டும் வகையில் அரசியல், மத மற்றும் கலாசார அம்சங்களின் மீது தாக்குதல் நடத்த சிலர் முயற்சிக்கின்றனர். ரமழான், தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் விரைவாக மாற்றமடையலாம். ஈஸ்டர் தாக்குதல் போன்று இல்லாவிட்டாலும் ஏனைய சம்பவங்கள் நிகழலாம்.

- இவ்வாறு எச்சரிக்கை

11

# அநுரவுடன் விவாதத்துக்கு சஜித் பிரேமதாஸ தயார்!

கொழும்பு, ஏப். 11

ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரவுடன் விவாதத்துக்கு தயாராக உள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அநுரகுமாரவுடன் விவாதத்துக்கு முன்னரே சஜித் தன்னை தயார்படுத்தி விட்டார. இந்த வாய்ப்பை ஏற்று விவாதத்துக்கான திகதி தொடர்பில் தீர்மானிக்குமாறு திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# பேஸ்புக் கணக்குகள் குறித்து தினமும் 200 முறைப்பாடுகள்!

## சிறுவர், பெண்களே அதிகம் பாதிப்பு

கொழும்பு, ஏப். 11

தங்கள் பெயரை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் போலி பேஸ்புக் கணக்குகளை அகற்றுமாறு கோரி கணினி குற்றப் புலனாய்வு பிரிவுக்கு (சைபர் க்ரைம்) தினசரி 200 முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று அந்தப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்ஷிகா குமாரி ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை

11

- முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய -

# சொகுசு வாகனங்கள் மூலம் ரூ. 200 கோடிக்கு மேல் மோசடி

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய 60இற்கும் மேற்பட்ட அதிசொகுசு வாகனங்களால் 200 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி இடம்பெற்றுள்ளது - என்று ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது அவற்றில் இரண்டு வாகனங்கள் காணாமல் போயுள்ளன என்று அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

கடந்த இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து, நல்லாட்சி அரசின் நூறு நாள் வேலைத்திட்டம் முடிந்து, பாராளுமன்ற தேர்தல் பிரசாரக் காலம் அது.

அந்தத் தேர்தல் பிரசாரக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக இருந்த மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன், டான் தொலைக்கட்சியில் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியை கண்டவர் டான் குழுமத்தின் தலைவர் குகநாதன். அவர் பேட்டி ஆரம்பித்தபோது கேட்ட முதலாவது கேள்வி இதுதான்:

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதவளித்தோம். அப்படிச் செய்யாமல் அந்தத் தேர்தலில் நீங்களோ அல்லது சம்பந்தன் ஐயாவோ தமிழ் வேட்பாளராக போட்டியிட்டிருந்தால் ஏழு இலட்சம் வாக்குகளை பெற்றிருப்பீர்கள். அப்படி பெற்றிருந்தால் மற்றைய இரண்டு வேட்பாளர்களும் ஐம்பதுவீத வாக்குகளைப் பெற்றிருக்க மாட்டார்கள். நாங்கள் இந்த வாக்குகளை அடுத்த தேர்தலில் பேரம் பேசும் வாக்குகளாகப் பயன்படுத்தியிருக்கலாம் அல்லவா?

அதற்கு சுமந்திரன் இவ்வாறு பதிலளித்தார்:

"உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ தெரியவில்லை. தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாக நான் இந்தக் கருத்தை பகிரங்கமாக முன்வைத்திருந்தேன். ஒரு பகிரங்கக் கூட்டத்தில் நான் இதனைப் பேசியபோது அந்தக் கூட்டத்தில் இருந்த மனோ கணேசனும் அதை ஆதரித்தது பத்திரிகையில் பெரிதாக வந்தது. நான் ஒரு ஆங்கில பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு இரண்டு அல்ல மூன்று வேட்பாளர்கள் தேவை என்று கூறியிருந்தேன். ஆனால், அதைப் பற்றி நாங்கள் தீர்க்கமாக யோசித்தபோது பலருடைய கருத்து விசேசமாக சம்பந்தன் ஐயாவுடைய கருத்து அப்படியான ஒரு பரீட்சார்த்த தேர்தலாக இதனை நடத்த முடியாது. மகிந்த ராஜபக்ஷவை எந்த விதத்திலும் தோற்கடிக்க வேண்டும் என்பதில் அவர் தீவிரமாக இருந்தார்."

இந்தக் கருத்தை இரண்டாயிரத்து பதினைந்தில் கூறிய சுமந்திரன், இப்போது பரவலாக தமிழ் பொதுவேட்பாளர் பற்றி பேசப்படுகின்ற போது, "இந்த யோசனை ராஜபக்ஷக்களை வெல்ல வைப்பதற்கான யோசனை" என்கிறார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இதுவரை மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதற்காகவே தமிழ் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அப்படி வாக்களித்தும் இதுவரை அதனால் கிடைத்த பலாபலன்கள் நாம் அறிந்தவைதான். இப்போது விழுந்து கிடக்கும், ராஜபக்ஷக்களை மீண்டெழுப் பண்ணுவதற்கான முயற்சிதான் இந்த தமிழ் பொதுவேட்பாளர் கோரிக்கை என்கிறார் சுமந்திரன். அதாவது, பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாததால், வீழ்ந்து கிடக்கின்றனர் ராஜபக்ஷக்கள். தமிழர் தரப்பு தமது வேட்பாளரை நிறுத்தி சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைக்காக அவருக்கு வாக்களிக்கச் சொன்னால், ராஜபக்ஷக்கள் அதனை காரணம் காட்டியே மீண்டு எழுந்துவிடுவார்கள் என்ற அவரின் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருந்துவிட்டுப்போகட்டும்.

கடந்த மூன்று தேர்தல்களிலும், எமது கோரிக்கையை வலியுறுத்தி பகிரங்கமாக வேட்பாளர்களுடன் ஒப்பந்தம் செய்தால், அந்த ஒப்பந்தத்தைக் காட்டியே ராஜபக்ஷக்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வேட்பாளர்களை ஆதரித்தோம். இப்போது அவர்கள் மீண்டு எழுந்துவிடுவார்கள் என்பதற்காக நிபந்தனை இல்லாமல் வேறு ஒருவரை ஆதரிக்க வேண்டும் என்கிறாரா என்பது தெரியவில்லை.

இன்று சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கின்ற நிபந்தனைகள் மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பவை அல்ல. ஆனாலும், அதனை ஏற்றுக்கொண்டால் தான் இந்த நாட்டை கொண்டு நடத்தமுடியும் என்று சிங்கள மக்களிடம் நிலைமையைச் சொல்லி வாக்குக்கேட்க, இந்த சிங்களத் தலைவர்களால் முடிகின்றது என்றால், அதனையே இனப்பிரச்னையைத் தீர்த்தால் தான் நாடு முன்னோக்கி செல்லும் என்று சிங்கள மக்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களின் சம்மதத்தைப் பெறக்கூடிய தலைவர் ஒருவர் அங்கு வரும்வரை அவர்களில் எவரையும் ஆதரிக்கவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ராஜபக்ஷக்கள் எழுந்துவிடக்கூடாது என்று எத்தனை காலம்தான், பூச்சாண்டி காட்டப்போகின்றோம். அவர்கள் படுத்துக்கிடந்தால் என்ன, எழுந்து நின்றால் நமக்கு என்ன வந்துவிடப்போகின்றது?

எத்தனை காலம்தான் அவர்கள் எழுந்துவிடாமல் அவர்களை "கட்டிப் பிடித்துக் கொண்டு" நிற்கப்போகின்றோம்?

- ஊர்க்குருவி.

# வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலை சமூகத்தினர் கவனவீர்ப்பு போராட்டம்

வடமராட்சி, ஏப். 11

வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலை சமூகத்தினர் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து நேற்று காலை இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்

முறையற்ற விதத்தில் அல்லது சட்ட விரோதமாக பாடசாலையால் நிதி சேகரிக்கப்படுவதாக தகவல் வெளியிட்ட பழைய மாணவர் சங்க முன்னாள் நிர்வாகிக்கு எதிராகவும் அதே பாடசாலையில் பணியாற்றும் அவரின் மனைவிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுமே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



பாடசாலை முன்பாக போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் வடமராட்சி வலய கல்வி அலுவலகம் வரை சென்று வலய கல்வி பணிப்பாளரிடம் தமது கோரிக்கை மனுவை கையளித்தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் தான் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்தார்.

இதேநேரம், மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்தனர் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தலையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் வகுப்புகளுக்கு சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

# குறிகாட்டுவான் இறங்குதுறையில் ஆராக்கிய உணவகம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

குறிகாட்டுவான் இறங்குதுறையில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரோக்கிய உணவகம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாகவும் தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் வேலணை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்துகின்ற ஆரோக்கிய உணவகமே குறிகாட்டுவானில் திறந்து வைக்கப்பட்டது.



புங்குடுதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட ஆரோக்கிய உணவகத்தின் ஊடாக பாரம்பரிய மற்றும் இயற்கையான உணவுகளை உற்பத்தி செய்து குறைந்த விலையில் மக்களுக்கு வழங்குவதற்காகவும், சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடனும் குறித்த பகுதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

# சமய கல்வியை கைவிட்டதாலேயே குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன

## ஜனாதிபதிக்கு கூறினர் பிக்குகள்



கொழும்பு, ஏப். 11

சமயக் கல்வி பெருமளவில் கைவிடப்பட்டிருப்பதால் சமூகத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என்று அகில இலங்கை சாசன பாதுகாப்பு சபை பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

நல்லொழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையான பரிந்துரைகளை அகில இலங்கை சாசன பாதுகாப்பு சபை முன்மொழிந்துள்ளது.

பொது நலனுக்காக நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்ப பல திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென குறித்த சபையின் பரிந்துரைகள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, பிரிவெனாக்களை ஆரம்பித்தல், அறநெறிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்குதல், கல்வியற் கல்லூரிகளை நிறுவுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் தற்போதைய ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர், பிரதி அமைச்சர், அமைச்சர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட பதவிகளின் கீழ் ஆற்றிய சேவைக்கு சாசன பாதுகாப்புச் சபை பாராட்டு தெரிவித்துள்ளது.

மாணவர் சமூகம் அறநெறி பாடசாலைக் கல்வியை முறையாகக் கற்க வாய்ப்பு வழங்குதல், பௌத்த அறநெறி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கல், காணி உரிமம் இல்லாத விகாரைகளுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தேரவாத பௌத்தத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை இனங்காணல், அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் இதன்போது முன்மொழியப்பட்டுள்ளன.

மேலும், நாட்டின் இருப்புக்கும் மத மறுமலர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு கல்வி மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன. (இ)

ஈழநாடு
Eelanadu
11.04.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ராஜபக்ஷ பூச்சாண்டி

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் பரவலான உரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன - அதிகம் சிவில் சமூகத் தளத்திலேயே இது உரையாடப்பட்டு வருகின்றது. இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை. குறிப்பாக, இலங்கை தமிழ் அரசு கட்சி அதன் உத்தியோகபூர்வமான முடிவை அறிவிக்கவில்லை. தற்போதைய நிலையில் தமிழ் அரசு கட்சியால் ஒரு முடிவை எடுக்க முடியாமல் இருப்பதும் இதற்கான காரணமாக இருக்கலாம். ஆனால், அவர்கள் தொடர்ந்தும் அமைதி காக்க முடியாது. ஒன்றில் ஆதரிக்க வேண்டும் - இல்லையேல், தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வெள்ளைத் தாளில் கையெழுத்திட வேண்டும். இதனைத் தவிர, அவர்களுக்கு முன்னால் வேறு தெரிவுகள் இல்லை. இதற்கிடையில், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன், “இதன் பின்னணியில் ராஜபக்ஷக்களா?”, என்றவாறு கூறி விடயத்தை திசைதிருப்ப முயற்சிக்கின்றார்.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷ பூச்சாண்டியை காண்பித்தே தமிழ் மக்கள் எதிரணி வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டனர். அப்போது ராஜபக்ஷ தென்னிலங்கை அரசியலில் உண்மையிலேயே பலமாக இருந்த காலம். 2010 மற்றும் 2020 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் தமிழ் மக்கள் ஆதரித்த தென்னிலங்கை வேட்பாளர்களால் வெற்றிக்கு அருகில்கூட செல்ல முடியவில்லை. தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமல்தான் ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருந்தனர் - மேலும் அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பெரிதும் எதிர்பார்க்கவும் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ அதனை வெளிப்படையாகவே அறிவித்திருந்தார். இந்த நிலையில் ராஜபக்ஷக்களை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதா அல்லது இல்லையா என்பது முற்றிலும் சிங்கள மக்களின் பிரச்னை.

தமிழ் மக்களின் பிரச்னையோ வேறு - அதாவது, தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்வது - அதற்கான அழுத்தங்களை பிரயோகிப்பது. இந்த அடிப்படையில் கடந்த பதினைந்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்து விட்டன.

ஒப்பீட்டடிப்படையில் ஓரளவு நம்பிக்கையுடன் நோக்கப்பட்டது 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம்தான். ஆனால், அதன் மூலமும் எந்தவொரு நன்மையும் ஏற்படவில்லை. இதற்கான முழுப் பொறுப்பும் சம்பந்தனையும் சுமந்திரனையுமே சாரும். ஆனால், தங்களின் மோசமான அணுகுமுறைத் தோல்வி தொடர்பில், இதுவரையில் சம்பந்தனோ அல்லது சுமந்திரனோ தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூறவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியை ராஜபக்ஷக்களுடன் தொடர்புபடுத்துவதானது அடிப்படையிலேயே அரசியல் இயலாமையாகும். ஏற்கனவே, சம்பந்தனும் தமிழ் பொது வேட்பாளர் முயற்சியை ஆதரிக்கவில்லை என்று கூறினாரென செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் இங்கு விடயம் வேறு. அதாவது, இவ்வாறானதொரு சவாலான நிலைப்பாட்டை எடுக்கும் அரசியல் திராணி தமிழ் கட்சிகளிடம் இல்லை. சுமந்திரன் அச்சப்படுகின்றார். அதேபோன்று ஏனையவர்களிடமும் அந்த அச்சம் உண்டு. அதாவது, தாங்கள் இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுக்கும்பட்சத்தில் தமிழ் மக்கள் தங்களின் கோரிக்கையை ஏற்று வாக்களிக்காது விட்டுவிட்டால் என்ன செய்வது? இந்தக் கேள்வியால் ஏற்படும் அச்சத்தாலேயே ராஜபக்ஷ பூச்சாண்டி சுமந்திரனுக்கு தேவைப்படுகின்றது. சொந்த மக்கள் தங்கள் கோரிக்கையை ஏற்பார்களா என்று அச்சப்படுவதானது அடிப்படையிலேயே மோசமான அரசியல் தோல்வியாகும். இங்குள்ள அடிப்படையான அச்சம் தங்களின் பாராளுமன்ற உப்பரிகைகளுக்கு பங்கம் வந்துவிடக்கூடாது என்பதுதான்.

ராஜபக்ஷக்கள் எழுவதும் வீழ்வதும் சிங்கள மக்கள் தொடர்பானது. இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் ராஜபக்ஷக்களை அவர்கள் ஆதரிப்பார்கள் என்றால் அது பற்றி தமிழ் மக்கள் எதற்காக அலட்டிக்கொள்ள வேண்டும்?

# அமைச்சர்கள் வெளிநாடு செல்ல இனிக் கட்டுப்பாடு

## அவசர உத்தரவை பிறப்பித்த ரணில்

கொழும்பு, ஏப். 11

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருவதால் அரசியல் பணிகள் அதிகளவாக மேற்கொள்ளும் தேவை அரசாங்கத்துக்கு எழுந்துள்ளது.

இதனால் வெளிநாட்டுப் பயணங்களை முடிந்தவரை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சர்களுக்கும் அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அவசர கட்டளையை பிறபித்துள்ளார்.

மே தினக் கூட்டத்தின் பின்னர் தேர்தலை கருத்திற் கொண்டு அரசியல் பணிகளை தீவிரப்படுத்த ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நேரடியாக இலக்காகக் கொண்டு அரசியல் பணிகளை தொடங்குவதற்கான திட்டத்தை ரணில் வகுத்துள்ளார்.

இதனால் இந்த ஆண்டு மேதின பேரணியை மிகப் பெரிய அளவில் நடத்த ரணில் திட்டமிட்டுள்ளார். தற்போது நாடு முழுவதும் தொழில்முறை குழுக்களுடன் கூட்டங்களை நடத்தும் பணியில் ஐ.தே.க ஈடுபட்டுள்ளது.

பல கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து கொள்ளவுள்ள பரந்த கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கும் நோக்கில் ரணில் இந்த திட்டங்களை வகுத்துள்ளார்.

ஏற்கனவே, பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான எம்.பி.க்கள் ரணிலுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# தேர்தலுக்குச் செல்வதற்கான மனப்பான்மை அரசிடமில்லை

## சாந்த பண்டார தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 11

நாட்டை முற்னேற்றுவதையே அரசாங்கம் பிரதான நோக்கமாக கொண்டுள்ளதால் தற்போது தேர்தல் ஒன்றிற்கு செல்லவதற்கான மனப்பாங்கு அரசாங்கத்திடம் இல்லை என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில ஆண்டுகளாக மக்கள் பல பிரச்னைகளை எதிர்கொண்டனர். எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நின்றனர்.

ஆனால் இம்முறை ஆடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை வாங்குவாற்கு கடைகளில் மக்கள் அணிதிரள்வதை காணமுடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் பலனாகவே இந்த மாற்றம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் சரியான வழிக்காட்டலின் கீழ் கிடைத்த வெற்றியின் பலனை இன்று மக்கள் அனுபவிக்கின்றனர்.

புத்தாண்டுக் காலத்தில் உணவு பொருட்களின் விலை இரட்டிப்பாகி உள்ளதென பலரும் குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மக்களுக்கு இந்த உண்மை புரியும்.

எனவே நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பணப்புழக்கம் சீராகாமல் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட 1.5 பில்லியன் டொலர்களுடன் வெளிநாட்டுக் கையிருப்பு 4.9 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 5 பில்லியன் டொலர்களைக் கடந்துவிடும் என நம்புகிறோம். தற்போது தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்கான மனப்பான்மை எங்களிடம் இல்லை.


தற்போதைய பொருளாதார வேலைத்திட்டத்தை தொடரவே விரும்புகிறோம். சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் அதற்கு முகம்கொடுக்க தயாராக இருக்கிறோம்.

தற்போது பொருளாதாரத்தை பலப்படுத்துவது குறித்தே நாம் கவனம் செலுத்துகிறோம் -என்றார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 11 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 29
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரிதியை




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் வைத்து உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமலே ஒருவித பட படப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமை கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

**மீனம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

# தமிழ்நாட்டில் 15 வீத வேட்பாளர்கள் குற்றப்பின்னணி கொண்டவர்கள்!

சென்னை, ஏப். 11

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் போட்டியிடுபவர்களில் 15 வீதத்தினர் குற்றப் பின்னணி கொண்டவர்கள் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஜனநாயக சீர்திருத்த சங்கம் மற்றும் தேசிய தேர்தல் கண்காணிப்பகம் நடத்திய ஆய்விலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

945 வேட்பாளர்களின் பிரமாண பத்திரங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில், 135 வேட்பாளர்கள் அதாவது 15 சதவீதம் பேர் தங்களுக்கு எதிராக குற்ற வழக்குகள் இருப்பதை தெரிவித்துள்ளனர். இதில், 81 பேர் அதாவது 8 சதவீதம் பேர், கடுமையான குற்ற வழக்குகள் உள்ளவர்கள்.

அந்த வகையில், நாம் தமிழர் கட்சியில் 28 சதவீதம் குற்ற வழக்குகள், 15 சதவீதம் கடும் குற்ற வழக்குகள் கொண்டவர்களும், அதிமுக சார்பில் 35 சதவீதம் குற்ற வழக்குகள், 18 சதவீதம் கடும் குற்ற வழக்குகள் கொண்டவர்களும் களத்தில் உள்ளனர். பா. ஜ. க. சார்பில் 70 சதவீதம் குற்ற வழக்குகள், 39 சதவீதம் கடும் குற்ற வழக்குகள், திமுக சார்பில் 59 சதவீதம் குற்ற வழக்குகள், 27 சதவீதம் கடும் குற்ற வழக்குகள், பாமக சார்பில் 60 சதவீதம் குற்ற வழக்குகள், 40 சதவீதம் கடும் குற்ற வழக்குகள், காங்கிரஸ் சார்பில் 78 சதவீதம் குற்ற வழக்குகள், 22 சதவீதம் கடும் குற்ற வழக்குகள் கொண்ட வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# வளர்ச்சியடைந்த இந்தியாவை தமிழகம் வழிநடத்தும் நேரமிது!

## பிரதமர் நரேந்திர மோடி



வேலூர், ஏப். 11

"வளர்ந்த இந்தியாவை தமிழகம் வழிநடத்தக்கூடிய நேரம் இது. ஆனால், தி. மு. க. இன்னும் பழைய சிந்தனைகளோடு இருப்பதோடு, பழைய அரசியலையும் செய்து நம் அனைவரையும் இதில் சிக்க வைக்க நினைக்கிறது" என்று வேலூர் பா. ஜ. க. பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி தெரிவித்தார்.

இரு நாள் பயணமாக தமிழகம் வந்த மோடி வேலூரில் பிரசாரத்தில் ஈடுபட்டார். அங்கு அவர் தெரிவித்தவை வருமாறு,

இந்தியா தற்போது உலகின் வல்லரசாக மாறி வருகிறது. இதில் தமிழகத்தின் பங்கு மிகப் பெரியது. இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. விண்வெளி துறையில், உற்பத்தி துறையில் இந்தியாவை முன்னெடுத்துச் செல்வதில் தமிழகம் மிகக் கடுமையாக உழைக்கிறது. தமிழகத்தில் அமைந்துள்ள இராணுவ பாதுகாப்பு உற்பத்தி மையங்கள் மூலமாக நடைபெறும் இராணுவ தளபாடங்கள் உற்பத்தி தமிழகத்தை மிகப்பெரிய அளவில் முன்னோக்கி கொண்டு செல்லும்.

வளர்ந்த இந்தியாவை தமிழகம் வழிநடத்தக்கூடிய நேரம் இது. ஆனால், தி. மு. க. இன்னும் பழைய சிந்தனைகளோடு இருப்பதோடு, பழைய அரசியலையும் செய்து நம் அனைவரையும் இதில் சிக்க வைக்க நினைக்கிறது. ஒட்டுமொத்த தி. மு. கவும் ஒரு குடும்பத்தின் சொத்து. தி. மு. கவின் குடும்ப அரசியலால் தமிழக இளைஞர்கள் முன்னேறவில்லை. தமிழக கலாசாரத்துக்கு எதிராக தி. மு. க. செயல்படுகிறது. குடும்ப அரசியல், ஊழல் போன்றவற்றால் தமிழகத்தை தி. மு. க. பின்னோக்கி அழைத்துச் செல்கிறது -என்றார். (ஐ)

# இலங்கையிடம் வழங்கிய கச்சதீவை மீட்க வேண்டும்

## பன்னீர்செல்வம் தெரிவிப்பு



சென்னை, ஏப். 11

"தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து நிரந்தரமாக தடுப்பதற்கான ஒரே வழி இந்திய அரசமைப்பு சட்டத்துக்கு எதிராக தாரைவார்க்கப்பட்ட இந்தியாவின் ஒரு பகுதியான கச்சதீவு இலங்கை நாட்டிடமிருந்து மீட்டெடுக்கப்பட வேண்டும். இதைத்தான் தமிழக மீனவர்கள் எதிர்பார்க்கிறார்கள்." என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஓ.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கையில், "கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டதில் இருந்து தமிழக மீனவர்கள் ஆற்றொணாத் துயரத்துக்கு ஆளாகி வருகின்றார்கள். அவர்களுடைய வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது. தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதும், சிறைபிடிக்கப்படுவதும், படகுகள் மற்றும் வலைகள் சேதப்படுத்தப்படுவதும் தொடர் கதையாக நிகழ்ந்து வருகிறது.

தற்போதுள்ள சூழலில், தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரின் தாக்குதலிலிருந்து நிரந்தரமாக தடுப்பதற்கான ஒரே வழி இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக தாரைவார்க்கப்பட்ட இந்தியாவின் ஒரு பகுதியான கச்சத்தீவு இலங்கை நாட்டிடமிருந்து மீட்டெடுக்கப்பட வேண்டும். இதைத்தான் தமிழக மீனவர்கள் எதிர்பார்க்கிறார்கள்- என்றார். (ஐ)

# திருமாவளவன் தங்கியுள்ள வீட்டில் பொலிஸ் சோதனை!

கடலூர், ஏப். 11

சிதம்பரம் மக்களவைத் தொகுதியில், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மீண்டும் போட்டியிடுகிறார்.

இதற்காக, இவர் சிதம்பரம் புறவழி சாலையில் உள்ள நடேசன் நகரில் உள்ள முருகானந்தம் என்பவரது வீட்டில் தனது கட்சி நிர்வாகிகளுடன் தங்கி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இரவு கடலூர் பிரிவு வருமான வரித்துறை உதவி ஆணையர் பாலமுருகன் தலைமையில் 7 பேர் கொண்ட குழு அங்கு சென்று, வீட்டில் உள்ள அனைத்து அறைகளையும் சோதனை செய்தனர். குறிப்பாக திருமாவளவன் தங்கி இருக்கும் அறையை நீண்டநேரம் சோதனை செய்தனர். ஆனால் எதுவும் கைப்பற்றப்படவில்லை. (ஐ)

# சரியான நேரத்தில் பெரமுன வேட்பாளரை அறிவிக்கும்!

## கூறுகிறார் ரஞ்சித் பண்டார

கொழும்பு, ஏப். 11

**பொதுஜன பெரமுன சரியான நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளரை மக்களுக்கு அறிவிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.**



கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக மாறுபட்ட கருத்தினை தெரிவித்துவரும் நிலையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே ரஞ்சித் பண்டார இதனை கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பிரசன்ன ரணதுங்க முன்வைக்கும் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். அது கட்சியின் சார்பாக கூறப்பட்ட தீர்மானம் அல்ல.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் தொடர்பாக கட்சியின் நிறைவேற்று சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே நாம் உத்தியோகப்பூர்வமாக அறிவிப்போம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை என பலர் விமர்சிக்கின்றனர்.

ஆனால் அவ்வாறு அல்ல. நாம் சரியான நேரத்தில் எமது வேட்பாளரை களமிறக்குவோம். இன்று எம்மீது விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினர் ஜனாதிபதியாகும் கனவுடன் வலம் வந்தாலும் அவர்களுக்கு மக்கள் ஆணை கிடைக்கப்போவதில்லை.

ஏனென்றால் பொதுஜன பெரமுனவின் வேட்பாளரே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார்.

ஆட்சிக்கு வர நினைப்பவர்கள் தங்களின் கொள்கை திட்டங்களை முன்வைக்கவில்லை. ஆனால் பொதுஜன பெரமுன விடமே சிறந்த கொள்கை திட்டங்களும் வேலைத்திட்டங்களும் காணப்படுகின்றன-என்றார். (அ)

# மின் துண்டிப்புகள் இனி இல்லை!

கொழும்பு, ஏப். 11

எதிர்வரும் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பராமரிப்பு பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் மின் துண்டிப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, பண்டிகைக் காலத்தில் எவ்வித இடையூறுமின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு அவசியமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தேவையான எரிபொருளை அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, போதுமான எரிபொருள் கையிருப்பு நாட்டில் காணப்படுவதாக, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன மேலும் தெரிவித்தார். (அ)

# குற்றக் கும்பலைச் சேர்ந்த 9 பேர் விசேட பொலிஸ் குழுவால் கைது!

கொழும்பு, ஏப். 11

விசேட பொலிஸ் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த மேலும் 9 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இவர்களுடன் பல்வேறு தொடர்புகளை வைத்து குற்றச் செயல்களுக்கு ஆதரவளித்ததாக சந்தேகிக்கப்படும் 11 பேரும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று வரை 363 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் கும்பலைச் சேர்ந்த 363 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மன்னாரில் சிறப்பாக நடந்த நோன்பு பெருநாள் தொழுகை



மன்னார், ஏப். 11

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் மன்னார் மாவட்டம் சயீட் சிட்டி பொது மைதானத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒரே நேரத்தில் நோன்புப் பெருநாள் திடல் தொழுகையும் குத்பா பிரசங்கமும் இடம்பெற்றது. மன்னார் சயீட் சிட்டி பிரதம இமாம் எச்.என்.எம்.எம். எஹியாகான் நோன்புப் பெருநாள் தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார்.

இதனை தொடர்ந்து ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இதேவேளை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன.

மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். நேற்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொண்டனர். (அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் அவசியம்

## சர்வதேச தொழிலாளர் சம்மேளனம்

கொழும்பு, ஏப். 11

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கிடைக்கப்பெறுவதற்கு சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தமது அதிகார எல்லைக்குட்பட்ட வகையில் அனைத்து அறிவித்தல்களையும் விடுத்துள்ளது மேற்படி சம்மேளனத்தின் பிரதானிகள், அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான இயக்குநர் ஜொனி சிம்ப்சனிற்கும், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பு அமைச்சில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பின்போது முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நகர்வுகள் பற்றி மேற்படி பிரதிநிதிகளிடம் ஜீவன் தொண்டமான் விளக்கமளித்தார். அத்துடன், இது விடயத்தில் உள்ள சவால்கள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள சர்வதேச தொழிலாளர் சம்மேளன பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என அறிவிறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் தொழில் பாதுகாப்பு தொடர்பில் தாம் கூடுதல் கரிசனை கொண்டுள்ளதாகவும் சர்வதேச பிரதிநிதிகள் அமைச்சரிடம் குறிப்பிட்டுள்ளனர். அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கூறியுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான சட்ட ஆலோசகர் கா.மாரிமுத்து, உப தலைவரும், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, உப தலைவரும், சிரேஷ்ட இயக்குநர் - தொழில் உறவு அதிகாரியுமான எஸ்.ராஜமணி ஆகிய இ.தொ.கா பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். திருமதி. பிரமோ, திரு.தசுன் கொடிதுவக்கு ஆகியோர் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

# நேரடி விவாதத்தில் பங்கேற்பதற்கு சஜித் பிரேமதாச தயார்நிலையில்!

## மயந்த திசாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 11


"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருடனும் நேரடி விவாதத்தில் பங்கேற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தயாராகவே உள்ளார்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருடனும் நேரடி விவாதத்தில் பங்கேற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தயாராகவே உள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான எமது வேலைத்திட்டங்கள் மிகவும் தெளிவாக காணப்படுகின்றன. ஆனால் தேசிய மக்கள் சக்தியிடம் எவ்வாறான திட்டங்கள் உள்ளது என்பதை அவர்கள் இதுவரை தெரிவிக்கவில்லை. எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரகுழு தேசியமக்கள் சக்தியின் பொருளாதார குழுவுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நேரடி விவாதத்தில் பங்கேற்கும்-என்றார். (அ)

# வவுனியா நெலுக்குளத்தில் முதியவரின் சடலம் மீட்பு



வவுனியா, ஏப். 11

வவுனியா நெலுக்குளத்தில் முதியவர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இன்று காலை வவுனியா நெலுக்குளம், குளத்தில் முதியவர் ஒருவரின் சடலம் இருப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிசார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

அந்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 9,375 விபத்துகள்! 66 பேர் உயிரிழப்பு!!

## 637 பேர் முழுமையாக ஊனமுற்றுள்ளனர்

கொழும்பு, ஏப். 11

**தெற்கு அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்டு, பதின்மூன்று வருடங்களில் 9,375 விபத்துகள் நடந்துள்ளன. அவற்றில் 5292 விபத்துகள் சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டவையாகும். இந்த விபத்துக்களில் 66 பேர் உயிரிழந்துள்ளதோடு, 637 பேர் முழுமையாக ஊனமுற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன் எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களை குறைத்துக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அரசாங்கம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதாலேயே 36 வீத விபத்துகள் ஏற்படுவதாகவும், அதனால் 17 வீதமானோர் கண் பாதிப்புகளுக்கு ஆளாவதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்கள் மற்றும் பட்டாசு விபத்துக்களை மட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அதன்படி, பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்களை மட்டுப்படுத்துதல் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதி பாதுகாப்பு தேசிய சபை ஆகியன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் சஜித் ரணதுங்க, நேருக்கு நேராக முச்சக்கர வண்டிகள் மோதிக்கொள்வதால் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் மக்கள் கடுமையான விபத்துக்களில் சிக்கியவர்கள் இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அதிகளவு அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துக்களிலேயே அதிகளவானோர் மரணிப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அதனால் நாளாந்தம் 10 பேர் வரையில் உயிரிழப்பதாகவும், விபத்துக்களை மட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனையடுத்து, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் நவோமி ஜயவர்தன, பண்டிகைக் காலத்தில் பேருந்துகளினால் ஏற்படும் விபத்துக்களை குறைப்பதற்கு பஸ் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல், போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் தொடர்பில் 1955 என்ற அவசர இலக்கத்திற்கு 24 மணித்தியாலங்களும் அறிவிக்க முடியும் என்பதோடு, கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக பதிலளிக்க அதிகாரிகள் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் பிரியந்த சூரிய பண்டார,

பண்டிகைக் காலத்தில் இரண்டு 2 இலட்சம் பேர் அதிவேக வீதிகளை பயன்படுத்தக்கூடும் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும். அதனால் அதிவேக வீதிகளின் சகல காசாளர் நிலைய கதவுகளையும் திறந்து வைத்திருக்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதிவேக வீதிகளில் ஏற்படும் விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையில் சோர்வடைந்த சாரதிகள் ஓய்வெடுப்பதற்கான இடம் புத்தாண்டுக்கு முன்னதாக திறக்கப்படும் என்பதோடு, பண்டிகைக் காலங்களில் ஏற்படக்கூடிய விபத்துகளை மட்டுப்படுத்த அனைத்து சாரதிகளும் வீதி விதிமுறைகளை பேண வேண்டியது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அதிவேக வீதிப் பாதுகாப்பு நடவடிக்கை ஆலோசனைக் குழு உறுப்பினர் கலாநிதி சாமோத் ஹெட்டியாராச்சி, அதிவேக வீதிகளில் 56 வீத விபத்துகள் சாரதிகளின் கவனக் குறைவால் ஏற்படுகிறது.

அவற்றில் 35 வீத விபத்துக்களில் மரணம் அல்லது முழுநேர முழுமையான முடக்கத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், கணக்கெடுப்பு மற்றும் மேற்பார்வை அறிக்கைகளில், அதிவேக வீதி விபத்துகளுக்கு சாரதிகளின் அலட்சியம், வாகனங்களை பராமரிக்காமை மற்றும் மூன்றாம் தரப்பினரால் விபத்துக்கள் ஏற்படுத்தப்படுதல் உள்ளிட்ட மூன்று முக்கிய விடயங்களே விபத்துக்களுக்கு காரணமாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# அநீதிகளுக்கு எதிராக அணி திரளவேண்டும்!

## மக்களை அழைக்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஏப். 11

உள்ளூர் சந்தைகளில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராக பாரிய போராட்டங்களை நடத்த மக்கள் அணி திரள வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் எண்ணெய், எரிவாயு, மின்சாரம் இல்லாத போது மக்கள் தங்கள் உரிமைகளுக்காக எழுந்து நின்றார்கள்.

ஆனால் உள்ளூர் சந்தைகளில் இடம்பெறுகின்ற அநீதிக்கு எதிராக இதுவரை அத்தகைய நடவடிக்கையை மக்கள் எடுக்கவில்லை.

எனவே, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு எதிராக மக்கள் எழுந்து நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

எனது முகநூல் கணக்கின் ஊடாக திங்கட்கிழமைதோறும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை மக்களுக்கு அறிவிக்கப்படும்.

இறக்குமதி விலை, மொத்த விலை மற்றும் சில்லறை விலையை தெரிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அந்தவகையில் பொருட்களின் விலையை மக்களுக்கு தெரியப்படுத்துமாறு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பல்வேறு அமைப்புகளும் இந்த விடயத்தில் தலையிட வேண்டும்.

முகப்புத்தகத்தில் காட்சிப்படுதலுடன், நாட்டு மக்கள் அனைவரும் அறியும் வகையில் விலை அறிவிப்பு முறையை அறிவிக்க வேண்டும்-என்றார்.

# நிர்வாணமான நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணத்தில் வயோதிப பெண்ணொருவர் நிர்வாணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாந்தினி எனும் 63 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் பிள்ளைகள் மற்றும் கணவரை பிரிந்து தனியாக வீட்டில் வசித்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வீட்டில் சடலமாக காணப்பட்டதை அயலவர்கள் கண்ணுற்று பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சடலத்தை மீட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (அ)

# சாட் குடியரசு இலங்கையுடன் உறவை ஏற்படுத்த விருப்பம்

கொழும்பு, ஏப். 11

ஆபிரிக்க நாடான சாட் குடியரசுடன், இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய பலதரப்பு மன்றங்களில் சாட் குடியரசு இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், சாட் குடியரசு இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, சாட் குடியரசுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# மைத்திரி வெளிநாடு சென்றதில் சந்தேகம்

## கூறுகிறார் காவிந்த ஜெயவர்த்தன

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாடு சென்றமை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மைத்திரிபால சிறிசேன நாட்டையும் சாப்பிட்டார். ஆட்களை சாப்பிட்டுவிட்டு இப்போது தாய்லாந்திற்கு சென்று விட்டாரோ என அஞ்சுகிறோம்.

இது ஒரு தப்பிக்கும் முயற்சியா? என தனிப்பட்ட முறையில் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவரை உடனடியாக வரவழைத்து சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்-என்றார். (அ)

# அழையா விருந்தாளியாக சென்றாரா சுமந்திரன் எம்.பி.?

கொழும்பு, ஏப். 11

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டுக்கு, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை, எமது கட்சி விடுக்கவில்லை என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகளுக்கான அழைப்பினை வழங்கினோம்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தனிப்பட்ட அழைப்பை எமது கட்சி வழங்கவில்லை.

எனினும் தாமாக மாநாட்டுக்கு வந்தார்.

வந்தவரை வரவேற்கும் பண்பின் அடிப்படையில் அவரை நாங்கள் வரவேற்றோம்-என்றார். (அ)

# யாழ்.மாநகர ஆணையாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் கிருஸ்னேந்திரனுக்கு எதிராக மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றுக்கு தவறான தகவல்களை வழங்கி, மன்றை பிழையாக வழிநடத்தியதாக தெரிவித்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மீதான விசாரணைக்காக எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு ஆணையாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சுதந்திரக் கட்சிக்குள் முரண்பாடு உச்சம்!

## அதிகாரத்தை கைப்பற்ற இரு முனை போட்டி

கொழும்பு, ஏப். 11

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், மைத்திரி தரப்பும் பதில் தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சியில் களமிறங்கியுள்ளது.**

அத்துடன், சுதந்திரக்கட்சியின் தலைமையகத்துக்கு ஏற்கனவே பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் அங்கு சென்ற மைத்திரி தரப்பு மேலதிகமாக பூட்டொன்றை போட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியின் தவிசாளராக செயற்படுவதற்கு மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ள நிலையில், அக்கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அரசுடன் இணைந்து செயற்படும் சு.க. குழுவினர் முயற்சித்துவருகின்றனர்.

இந்நிலையில் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில் அவர்கள் ஒன்றுகூடி பதில் தவிசாளராக நிமல் சிறிபாலடி சில்வாவையும், தேசிய அமைப்பாளராக துமிந்த திஸாநாயக்கவையும் நியமித்துள்ளனர். இக்கூட்டத்தில் சந்திரிகா அம்மையாரும் பங்குபற்றி இருந்தார்.

இந்நிலையில் அரசியலமைப் சபையைக் கூட்டி பதில் தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கு மைத்திரி தரப்பும் முயற்சித்து வருகின்றது. இவ்வாறு கட்சிக்குள் மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் வெளிநாடு பயணமாகியுள்ளார்.

# மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேறியோருக்கு பொறி!

கொழும்பு, ஏப். 11

கட்சியின் ஒழுக்கத்தை மீறிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை ஒழுக்காற்று குழுவிற்கு வழங்க பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவிலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகி, வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ள மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் நேற்று முன் தினம் கூடிய அரசியல் குழுவில் கலந்துரையாடப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் அரசியல் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கட்சியின் ஒழுக்காற்று குழுவிற்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, பொதுஜன பெரமுனவில் வெற்றிடமாகக் காணப்படும் தொகுதி அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விரைவில் பொருத்தமானவர்களை நியமிக்க அதன் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, அனைத்து மாவட்டங்களுக்கும் மகளிர் ஒருங்கிணைப்பாளர்களை நியமிப்பதற்கும் அரசியல் குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ)

# முதலாளிமார்கள் சம்மேளனத்துக்கு செந்தில் தொண்டமான் எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 11

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு, இறுதி நேரத்தில் வருகை தராத முதலாளிமார் சம்மேளனத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான பேச்சுவார்த்தை இன்று வேதன நிர்ணயச் சபையில் இடம்பெறவிருந்தது.

இந்த நிலையில் குறித்த பேச்சுவார்த்தையில் முதலாளிமார் சம்மேளனம் கலந்துகொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

முதலாளிமார் சம்மேளனத்தின் அசமந்தப் போக்கே இதற்கு காரணம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விடயத்தில் உரிய தீர்வு கிடைக்காவிடின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# யானை சின்னத்தில் ரணில் போட்டியிடார்

## கூறுகிறார் ஆஷு மாரசிங்க

கொழும்பு, ஏப். 11

"ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க யானைச் சின்னம் அல்லாத வேறு ஒரு சின்னத்திலேயே போட்டியிடுவார்" என ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான பிரதானி ஆஷு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் இடம்பெறாது எனவும் அவ்வாறு நடத்தவும் முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டம்பர் அல்லது ஒக்டோபர் காலத்துக்குள் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற வேண்டும் எனவும் பொதுத் தேர்தலுக்கு செல்ல இன்னும் காலம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவது உறுதியானது எனவும் ஆனால், அவர் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் யானைச் சின்னத்தில் அல்லாமல் வேறு ஒரு சின்னத்திலேயே போட்டியிடுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலுக்காக கூட்டணி அமைக்கும் நடவடிக்கையின் அடித்தள நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாகவும் அதில் அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொள்வதே தங்களின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார். பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த 80 வீதமானவர்களின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இருப்பதாக அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளதாகவும் ஆஷு மாரசிங்க சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய, சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றவரான ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதே தங்களின் இலக்கு எனவும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# புத்தாண்டு சுபவேளை பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, ஏப். 11

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படி நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுபநேர கணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கினார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்றவைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# புத்தாண்டு காலப்பகுதியில் மரக்கறி தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, ஏப். 11

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு தேவையான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி, மரக்கறிகள், முட்டை, கோழி இறைச்சி மற்றும் பழங்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சடுதியாக அதிகரித்திருந்த மரக்கறிகளின் விலையும் அதற்கான தட்டுப்பாடும் தற்போது முற்றாக நீங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தின் கீழ், கோழி இறைச்சி, முட்டை, மரக்கறிகள், பழங்கள் மற்றும் அரிசி என்பன தேவைக்கு அதிகமாகச் சந்தைக்கு விநியோகிக்கப் பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

# எம்.பிக்களில் 83 பேர் ஜனவரியில் ஒருநாள்கூட சபைக்கு வரவில்லை

கொழும்பு, ஏப். 11

"நாட்டிலுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 83 பேர் கடந்த ஜனவரி மாதத்தில் ஒரு நாள் கூட பாராளுமன்ற கூட்டங்களுக்கு வருகை தரவில்லை" என வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதன்படி ஜனவரி மாதத்தில் ஒரு நாளாவது பாராளுமன்றத்துக்கு வருகை தராத அமைச்சர்களின் பெயர் பட்டியலில் மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்துக்கு வருகைத் தரும் அமைச்சர்களுக்கு கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும் எனவும் ஆனால் இந்த கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கூட அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகைத் தரவில்லை என்று குறித்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 142 பேர் குறைந்தபட்சம் குறித்த கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்கின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெரிட்டே ரிசேர்ச் நடத்திய இந்த ஆய்வில் பாராளுமன்றத்துக்கு வருகை தந்தும் கூட, சபை நடவடிக்கையின்போது ஒரு வார்த்தை கூட பேசாத அமைச்சர்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், புத்திக பத்திரண, பிரேமநாத் சீ தொலவத்த, சரித ஹேரத், அனுராத ஜயரத்ன, லலித் குமார, உதய குமார், குணதிலக ராஜபக்ஷ, அஜித் ராஜபக்ஷ, பிரமித பண்டார ஆகியோர் அதிக நாட்கள் பாராளுமன்ற அமர்வுகளுக்காக வருகை தந்தவர்களாக ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போலி நகைகளை வங்கியில் அடகு வைத்த இளைஞர் கைது

## திருக்கோவிலில் சம்பவம்

அம்பாறை, ஏப். 11

**தங்க முலாசம் பூசப்பட்ட போலி நகைகளை அரச வங்கி கிளையொன்றில் ஏமாற்றி அடகு வைத்து பணம் பெற்றார் எனும் குற்றச்சாட்டில் திருக்கோவில் பிரதேசத் தைச் சேர்ந்த நபரொருவரை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத் தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.எச்.எம். ஹஸீப் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.**

அக்கரைப்பற்று சாகாமம் வீதியில் அமைந்துள்ள அரச வங்கிக் கிளையில், கடந்த வருடம் தங்க முலாசம் பூசப்பட்ட போலி நகைகளைச் சந்தேக நபர் அடகு வைத்து, 10 லட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றார் என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், குறித்த வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அதிகாரிகள் ஆய்வு செய்தபோதே, தங்க முலாசம் பூசப்பட்ட போலி நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் குறித்த வங்கிக் கிளையினர் இது தொடர்பாக செய்த முறைப்பாட்டுக்கு அமைய, திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர் நாளைய தினம் ஆஜர் செய்யப்படவுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். (அ)

## கல்முனை ஹுதா திடலில் நோன்புப் பெருநாள்



அம்பாறை, ஏப். 11

புனித நோன்புப் பெருநாள் நபிவழித் திடல் தொழுகை கல்முனை ஹுதா திடலில் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் எம்.எப். எம்.ஜவ்ஸாத் (ஸலாமி) நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டதுடன் பலஸ்தீன் காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். (அ)

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் நோன்பு பெருநாள் தொழுகை



அம்பாறை, ஏப். 11

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர். (அ)

# கல்முனை வலய கல்வி அலுவலக ஆளுமைகள் ஐவருக்கு பாராட்டு



அம்பாறை, ஏப். 11

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லும் இரு ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளான பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர்), யூ.எல். சாஜித் (உதவிக் கல்விப் பணிப்பாளர்-உடற் கல்வி மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்), என். எம்.ஏ.மலீக்(உதவிக் கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம் மற்றும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர்) ஓய்வு பெறும் இரு ஆசிரிய ஆலோசகர்களான சீ. செல்வராஜா (விவசாயம்), எம்.எஸ். சஹ்துல் அமீன் (விஞ்ஞானம்) ஆகியோர் பாராட்டி, நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எச். எம்.ஜாபிர், எம்.எச். றியாஸா, என். வருண்யா, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. சன்ஜீவன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு விசேட உரைகளையும் ஆற்றினர். (அ)

# கல்விப்பணிப்பாளருக்கு எதிராக பட்டிருப்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஏப். 11

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய கல்விச் சமூகத்தினால் பட்டிருப்பு கல்வி வலயக்கல்விப்பணிப்பாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன் போது பாடசாலை முன்றலில் இருந்து பேரணியாக பட்டிருப்பு வலயகல்வி அலுவலகம் வரை போராட்டம் அமைதியான முறையில் இடம்பெற்றது. இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதற்கு கிழக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தலையிட்டு இதற்கான உடனடி தீர்வு வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.



இதன் பிரகாரம் மாவட் அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பிரத்தியேக செயலாளர், பூ. பிரசாந்தன் சம்பவ இடத்துக்கு நேரடியாக விஜயம் செய்து ஆசிரியர்கள், மாணவர்கள், மக்களின் பிரச்னைகளை கேட்டறிந்து கொண்டார். இதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டகாரர்கள் கலைந்து சென்றனர். (அ)



# பழங்குடியின மக்களின் பிரச்னைகளை ஆராய குழு

திருமலை, ஏப். 11

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லூரில் வாழும் பழங்குடியின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்க திருகோணமலை அரசாங்க அதிபருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில் தங்களின் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை குறித்து கிழக்கு ஆளுநரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து நல்லூர் பிரதேசத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, வெளி ஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்துள்ளதுடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்பின் அவர்களின் பிரச்னைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரசாங்க அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

### காசா விவகாரத்தில்

# இஸ்ரேலிய பிரதமர் தவறிழைக்கின்றார்

## சாடுகின்றார் பைடன்

நியூயோர்க், ஏப். 11

**காசா விவகாரத்தை கையாள்வதில் இஸ்ரேலிய பிரதமர் தவறிழைக்கின்றார் என தான் கருதுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.**

அவர் தவறுசெய்கின்றார் என நான் கருதுகின்றேன் அவரது அணுகுமுறையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என பைடன் தெரிவித்துள்ளார்.

காசாவிற்குள் மருந்துகள் உணவுப்பொருட்கள் முழுமையாக செல்வதற்கான அனுமதி அவசியம் எனவும் பைடன் கூறினார்.

நெடுஞ்சாலையில் மனிதாபிமான அமைப்புகளின் வாகனங்கள் தாக்கப்பட்டமை மூர்க்கத்தனமான விடயம் என பைடன் தெரிவித்தார்.

இஸ்ரேலியர்கள் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும் அடுத்த ஆறுமுதல் எட்டு மாதங்களிற்கு அனைத்து விதமான மனிதாபிமான பொருட்களையும் அனுமதிக்கவேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என பைடன் குறிப்பிட்டார். (அ)



# ர∴பாமீது தாக்குதல் உறுதி!

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலேம் 11

“ர∴பா மீது தாக்குதல் நடத்தப்படும்” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது 6 மாதங்களைக் கடந்து நீடித்து வரும் நிலையிலேயே இஸ்ரேல் பிரதமர் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் ” ர∴பா மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகின்றது. ர∴பா மீது தாக்குதல் நடத்தினால் தான் ஹமாஸ் அமைப்பிற்கு எதிரான போரின் இலக்கு நிறைவடையும்” எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ர∴பாவில் 1.4 மில்லியன் பாலஸ்தீன மக்கள் இருப்பதால் ர∴பா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா விருப்பம் தெரிவிக்கவில்லை எனவும், அம்மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்ற அமெரிக்கா வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காசா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 33,200 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 76 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)





# இத்தாலி நீர்மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் நான்கு பேர் பலி!

ரோம், ஏப். 11

இத்தாலியின் வடக்கு பகுதியில் உள்ள நீர்மின்னுற்பத்தி நிலையம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 4 பேர் பலியானதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

பொலோக்னா நகரில் இருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மின்னுற்பத்தி நிலையம் ஒன்றிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதி தற்போது நீரில் மூழ்கியுள்ளதுடன் தீப்பரவலும் ஏற்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு இடம்பெற்ற பராமரிப்புப் பணிகளின் போது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

எவ்வாறாயினும் இதற்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை என அதிகாரிகள் கூறுகின்றனர். (அ)

# சீனாவுக்கு நேரில் சென்று எச்சரித்த அமெரிக்கா!

## பதிலடி கொடுக்க தயாராகும் பீஜிங்

பீஜிங், ஏப். 11

சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களால் புதிய தொழிற்சாலைகள் அழிந்துபோவதை வாஷிங்டன் அனுமதிக்காது என்று அமெரிக்க நிதி அமைச்சர் ஜேனட் யெல்லென் எச்சரித்துள்ளார்.

இரு நாட்டு உறவுகளைச் சீராக்கும் முயற்சியாக, கடந்த ஒன்பது மாதங்களில் இரண்டாம் முறையாக யெல்லென் சீனாவிற்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

பெய்ஜிங்கின் தொழிற்சாலை உற்பத்தியைக் கட்டுக்குள் வைத்திருக்கும்படி வலியுறுத்தும் நோக்கில் அவர், சீனப் பிரதமர், நிதி அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் போன்ற பலரையும் சந்தித்துப் பேசினார்.



தமது பயணத்தில், சீனாவின் மின்வாகனங்கள், மின்கலன்கள், சூரியசக்தித் தகடுகள் உள்ளிட்ட பசுமை எரிசக்திப் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வெகுவாக அதிகரிப்பது குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் ஆதரவால் அந்நாட்டில் உற்பத்தித் திறன் உள்நாட்டுத் தேவையைக் காட்டிலும் மிக அதிகமாக உயர்ந்திருப்பதாக யெல்லென் கூறினார்.

சீனாவிலிருந்து குறைந்த விலையில் பொருள்கள் இறக்குமதியாவதால் அமெரிக்காவிலும் இதர நாடுகளிலும் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன என்றார் அவர்.

அமெரிக்க நிதி அமைச்சர் ஜேனட் யெல்லென்வின் இந்த கருத்துகள் தொடர்பில் சீனாவில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் கருத்தை எதிர்த்து சீனா சில அறிவிப்புகளை வெளியிடும் என சர்வதேச பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பிரேசிலில் கைது அச்சுறுத்தலில் எக்ஸ் தளத்தின் பணியாளர்கள்!

## எலான் மஸ்க் தெரிவிப்பு

சான் பிரான்சிஸ்கோ, ஏப். 11

பிரேசில் நாட்டில் பணிபுரிந்து வரும் எக்ஸ் சமூக வலைதள நிறுவனத்தின் ஊழியர்கள் கைது அச்சுறுத்துலுக்கு ஆளாகி உள்ளனர் என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

போலி செய்திகளை பரப்புதல் மற்றும் நீதிக்கு இடையூறு செய்ததாகக் சொல்லி அந்த நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் அவர் வழக்கு விசாரணையை எதிர்கொண்டு வருகிறார். இந்தச் சூழலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிரேசில் அரசு எக்ஸ் தளத்தில் வலதுசாரி ஆதரவு கணக்குகளை முடக்குமாறு எக்ஸ் நிறுவனத்திடம் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவும் வழங்கப்பட்டது. ஆனால், அதனை எக்ஸ் தரப்பில் செய்யவில்லை என தெரிகிறது. முடக்கச் சொன்ன கணக்குகள் குறித்த விவரத்தை பிரேசில் அரசும் எக்ஸ் நிறுவனமும் தெரிவிக்கவில்லை.

எக்ஸ் தளம் சம்பந்தப்பட்ட கணக்குகளை முடக்காத பட்சத்தில் அபராதம் விதிக்கப்படும் எனவும் நீதிமன்றம் தெரிவித்தது. இந்த உத்தரவை நீதிபதி அலெக்ஸாண்ட்ரே டி மோரேஸ் பிறப்பித்தார். இந்நிலையில், நீதிபதி டி மோரேஸை கடுமையாக விமர்சித்துள்ளார் மஸ்க். அவர் பதவி விலக வேண்டும் எனவும் சொல்லி சில குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

“நீதிபதி டி மோரேஸ் சில எக்ஸ் தள பயனர்களின் கணக்கை முடக்க சொல்லி இருந்தார். அந்த கணக்குகளில் பதிவான ட்வீட்கள் ஊழல் குறித்து தொடர்ச்சியாக கேள்வி எழுப்பி வந்தன. அந்த கணக்குகள் எக்ஸ் தள சேவை சார்ந்த வீதிமீறலில் ஈடுபட்டதாக சொல்லி முடக்குமாறு தெரிவித்தார். அனைத்து நாட்டு சட்டங்களுக்கும் உட்பட்டு நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அதை நாங்கள் ஏற்காத சூழலிலும் அதையே செய்கிறோம்.

தற்போது பிரேசிலில் பணியாற்றும் எக்ஸ் ஊழியர்களை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்து செல்ல வேண்டும். ஏனெனில், அவர்கள் கைது அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளனர். பிரேசில் நாட்டில் நாம் நமது செயல்பாட்டை ஷட் டவுன் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். வருவாய் இழப்பும் ஏற்படும். ஆனால், இலாபத்தை காட்டிலும் கொள்கையே முக்கியம்” என தெரிவித்துள்ளார். இந்நிலையில், மஸ்கின் ஸ்டார்லிங்க் ஒப்பந்தத்தை கைவிடும் முடிவுக்கு வந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# இஸ்ரேலுக்கு கடுமையான வர்த்தக கட்டுப்பாட்டை விதிக்கும் துருக்கி!

அங்காரா, ஏப். 11

இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இஸ்ரேலுக்கு கடுமையான வர்த்தக கட்டுப்பாட்டை விதிக்க உள்ளதாக துருக்கி அறிவித்துள்ளது.

இஸ்ரேல் போர் நிறுத்தத்தை அறிவிக்கும் வரை வர்த்தக கட்டுப்பாடு தளர்த்தப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவிற்கு தடையின்றி மனிதாபிமான உதவிகளை அனுமதிக்கும் வரை இந்த தீர்மானம் அமுலில் காணப்படும் என துருக்கியின் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, சிமெண்ட் மற்றும் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட 54 பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், காசாவிற்கு விமானம் மூலமான துருக்கியின் மனிதாபிமான உதவியை இஸ்ரேல் தடுத்ததற்கு எதிராக பதிலடி கொடுக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் ஹக்கன் ஃபிடான் உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் அவை படிப்படியாக மற்றும் தாமதமின்றி செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்.

காசா மீதான இஸ்ரேலின் போரை கடுமையாக விமர்சிக்கும் நாடுகளில் தற்போது துருக்கி பெயர் பெற்றிருக்கின்றது.

மேலும் இஸ்ரேல் “பயங்கரவாத நாடு” என துருக்கி ஜனாதிபதி ரசிப் தைய்யிப் எர்டோகன் விமர்சித்துள்ளார். (அ)

# அஸ்வசும நலன்புரித் திட்டம் மூலம் 182,140 குடும்பங்களுக்கு நிவாரணம்

## அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

கொழும்பு, ஏப். 11

**மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலித்ததன் அடிப்படையில் மேலும் 182,140 குடும்பங்கள் நிவாரணப் பெறத் தகுதி பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



அவர்களுக்கான நிலுவைத் தொகைகள் உட்பட அனைத்து கொடுப்பனவுகளும் ஏப்ரல் 18 ஆம் திகதிக்குள் கணக்கிடப்படும் என அமைச்சர் கூறினார்.

அதன்படி, தற்போது 1,854,000 பேர் நன்மைகளைப் பெற்று வருவதாகவும், அதற்காக அரசாங்கம் 58.5 பில்லியன் ரூபாவைச் செலவிடுவதாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளை, நன்மைகளைப் பெறுவதற்கான சகல தகுதிகளையும் பூர்த்தி செய்த சுமார் 200,000 குடும்பங்கள் தமது வங்கிக் கணக்குகளைத் திறந்து அது தொடர்பான தகவல்களைப் புதுப்பிக்கத் தவறியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் ஊடகங்கள் தெரிவித்தபோதிலும், அந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடம் இருந்து இதுவரை எவ்வித பதிலும் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் இரண்டாம் கட்ட தீர்வுக்காக 400,000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றில் சுமார் 286,000 இதுவரை முறைமைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி மே மாதம் தொடங்க உள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் அஸ்வசும நலன்புரி திட்டத்தில் 24 இலட்சம் குடும்பங்களை உள்வாங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதுடன், இந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 205 பில்லியன் ரூபாவாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

(அ)

# வைத்தியசாலையில் கைதி தப்பியோட்டம்!

கொழும்பு, ஏப். 11

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடியவர் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் திருட்டு வழக்கு ஒன்று தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டவர் எனவும் லுனுகம்வெஹர பகுதியில் வசிப்பவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய நபரைக் கைது செய்வதற்காக அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை அதிகாரிகள் அம்பாந்தோட்டை மற்றும் லுனுகம்வெஹர பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வருடம் 15,693 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை!

கிளிநொச்சி, ஏப். 11

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு 15,693 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழான 2024ஆம் ஆண்டின் சிறுபோக பயிர்செய்கையினை முன்னெடுப்பதற்கான இறுதிக் கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விவசாய அமைப்புகளின் முழுமையான பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற குறித்தக் கூட்டத்தில், ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்கள் மற்றும் வட மாகாணத்தின் நீர்ப்பாசனக் குளங்களின் முறைமைகளே இம்முறை கிளிநொச்சியிலும் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

(அ)

# ஜெயராமனின் மறைவு ஈடு செய்யமுடியாதது!

## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இரங்கல்



யாழ்ப்பாணம், ஏப். 11

எங்கள் இசையுலகின் வயலின் கலைஞராக அனைத்து வகை இசை அரங்குகளை நிறைத்திருந்த ஜெயராமன் திடீர் மறைவு நெஞ்சுக்கு கனமானது; ஈடுசெய்யமுடியாதது என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தந்தையார் நாச்சிமார் கோயிலடி மிருதங்கம் வி. அம்பலவாணர் மகனாக இசை ஞான சூழமைவில் வளர்ந்தவர் ஜெயராமன். மிக இளவயதிலிருந்தே வயலின் வித்துவான் எஸ். சர்வேஸ்வர சர்மாவிடம் முறைப்படி வயலின் இசைபயின்றவர். நிறைந்த கேள்வி ஞானம் கொண்டவர். .சுத்தமான வாசிப்பினடியாக சுருதி வேந்தன் என கொண்டாடப்பட்டவர்.

என்னுடைய ஆக்க இசை அரங்குகளில் அவரோரு இசைந்த பொழுதுகள் மறக்கமுடியாதவை. சிவபுராண ஒலிப்பதிவில் மோகன ராகத்தில் இருவரும் இரண்டறக்கலந்து நின்ற பொழுதின் பதிவுகள் என்றென்றும் ஓய்வதில்லை-என்றார். (அ)

# யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் கட்டுநாயக்காவில் சிக்கினார்

கொழும்பு, ஏப். 11

போலி வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மலேசியா செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கும் நீதிமன்ற உத்தரவும் அமுலிலுள்ளது. எனவே, தனிப்பட்ட தகவல்களை மாற்றி போலி வெளிநாட்டு கடவுச்சீட்டை அவர் தயார் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை மலேசியாவின் கோலாலம்பூருக்கு செல்லவிருந்தார். விமான நிலையத்தில் அனுமதி வழங்கும் பணியை முடித்துவிட்டு பயணிகள் பகுதியில் அமர்ந்திருந்தபோது, அதிகாரிகளுக்கு அவர் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச்செல்ல முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குறித்த நபரை நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள மனித கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(இ)

# அவுஸ்திரேலியா-இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி வவுனியா, கம்பஹா மாவட்ட தமிழ் மாணவருக்கு

வவுனியா, ஏப். 11

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் புலமைப்பரிசில் உதவியை பெற்றுவரும் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு இவ்வாண்டும் வழங்கப்பட்டது.

கடந்த வாரங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாகவும், அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு, அங்கிருக்கும் மாணவர் கல்வி நிறுவகத்தின் ஊடாகவும், மலையகத்தில் - நுவரேலியா மாவட்டத்தில் மலைய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாகவும் இவ்வாண்டின் முற்பகுதிக்கான நிதியுதவிகள் இந்தப்பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அண்மையில் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்வு, இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வவுனியா தொடர்பாளர் அமைப்பான



நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் தலைவர் த. கணேஷ் தலைமையில், நிருவாக உத்தியோகத்தர் இ. தர்சிகாவின் ஏற்பாட்டில் வவுனியாவில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் கம்பகா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்வு, கல்லூரி அதிபர் திரு. நா.புவனேஸ்வரராஜா அவர்களின் தலைமையில், மாணவர் தொடர்பாளர் ஆசிரியை செல்வி லோஜினியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாணவர்களின் தாய்மாரும் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலியாவில் 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலங்கை மாணவர் கல்வி நிதியம், ஆரம்ப காலங்களில், இலங்கையில் நீடித்த போரினால், தந்தையை , குடும்பத்தின் மூல உழைப்பாளிளை இழந்த ஏழைத் தமிழ் மணவர்களுக்கு உதவியது.

போர் முடிவுக்கு வந்தபின்னர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் இந்த புலமைப்பரிசில் திட்டத்தில் இணைத்துக்கொண்டு உதவி வருகிறது.

அண்மையிலும், நேற்று முன்தினமும் வவுனியா - கம்பகா மாவட்ட நிகழ்ச்சிகளில் உதவி பெற்ற மாணவர்களும், அவர்களின் தாய்மாரும், கல்வி நிதியத்திற்கும், இந்நிதியம் ஊடாக உதவி வரும் அவுஸ்திரேலியா வாழ் அன்பர்களுக்கும் தங்கள் நன்றியை தெரிவித்தனர்.

(அ)

# வீழ்ச்சிப் பாதையில் இருந்து நாடு மீட்டெடுக்கப்பட்டுள்ளது!

## மனுஷ நாணாயக்கார பெருமிதம்

கொழும்பு, ஏப். 11

“நாம் நாட்டை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துள்ளோம். வீழ்ச்சிப்பாதையில் இருந்து நாடு இன்று மீட்டெடுக்கப்பட்டுள்ளது” என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் நாட்டை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துள்ளோம். வீழ்ச்சிப்பாதையில் இருந்து நாடு இன்று மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கைத் திட்டங்களே எமது நோக்கமாகும். அதனாலேயே ஒரு சில நெருக்கடியான சந்தர்ப்பங்களில் கடினமான தீர்மானங்களை மேற்கொள்ள நேரிட்டது.

நாடு தொடர்பாக சிந்தித்தே நாம் அவ்வாறான தீர்மானங்களை மேற்கொண்டோம். மக்கள் இன்று அதனை புரிந்துகொண்டுள்ளனர்.

அதனை விடுத்து பேரணிகளை முன்னெடுத்தல் மற்றும் அரசியல் விவாதங்களை நடத்துவதன் ஊடாக எதனையும் சாதித்துவிட முடியாது. அதனூடாக மக்களின் ஆணையையும் பெற முடியாது-என்றார். (அ)

## நாட்டில்...

விடுத்துள்ளார் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

அமைச்சர்களின் பாதுகாப்பு தொடர்பான நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்களின் உலகளாவிய அச்சுறுத்தல்களை சுட்டிக்காட்டிய அவர், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

அத்துடன், உலகளவில் தீவிரவாத மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் அடிக்கடி எதிர்பாராத விதமாக நிகழ்கின்றன. இது விழிப்புணர்வின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நாட்டில் பொது அமைதியின்மையைத் தூண்டும்வகையில் அரசியல், மத மற்றும் கலாசார அம்சங்களின் மீது தாக்குதல் நடத்த சிலர் முயற்சிக்கின்றனர் - என்றும் அவர் கூறினார். (ஐ- எ)

## நல்ல அறிவாற்ற...

பல்வேறு மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் பிளவுகள் இருந்தமையால் இங்கு ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்படவில்லை.

அந்த ஒருமைப்பாடு யதார்த்தமாக்கப்பட வேண்டும். தேசிய ஒற்றுமை, ஒன்றிணைவு மற்றும் சகோதரத்துவம் ஆகியவை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய அடித்தளத்தை சேர்க்கின்றன. ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு கல்வி பெரும் உறுதுணையாக அமைந்துள்ளது- என்றார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் நவீன வகுப்பறை உபகரணங்களை புத்தளம், ஆனமடுவ, நவகத்தேகம, கெலேவெவ விஜய மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைத்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ- எ)

## சொகுசு...

பாராளுமன்ற உறுப்பினருமான வசந்த சமரசிங்க

மேலும், சில வாகனங்களின் பெறுமதி 8 கோடி ரூபாய்க்கும் அதிகம். முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் பயன்படுத்திய 60இற்கும் மேற்பட்ட அதிசொகுசு வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான வாடகை பணத்தை செலுத்தத் தவறியுள்ளனர். இவற்றில் இரண்டு வாகனங்களை காணவில்லை.

இந்த வாகனங்களை 2006ஆம் ஆண்டு முதல் மூன்று ஜனாதிபதிகள் பயன்படுத்தினர். இந்த வாகனங்களுக்கு ஜனாதிபதி செயலர்களே பொறுப்பு என்பதால், இது தொடர்பான வழக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் இலங்கையில் உள்ள பிரபல தனியார் நிறுவனத்திடம் இருந்து குத்தகைக்கு பெறப்பட்டுள்ளன. எந்தெந்த ஜனாதிபதிகள் வாகனங்களை பயன்படுத்தினார்கள், எவ்வளவு பணம் செலுத்த வேண்டியிருந்தது, வாகன இலக்கங்கள் உள்ளிட்ட தகவல்கள் எதிர்காலத்தில் ஊடகங்கள் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

பணம் செலுத்தத் தவறியதால், செலுத்தப்படாத தொகைக்கு 3 தொடக்கம் 4 வீதமான மாதாந்திர வட்டி வசூலிக்க சம்பந்தப்பட்ட வாகன நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. வரவு - செலவு திட்டத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் என்ன செய்தார்கள் என்பதில் சிக்கல் இருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் கூறியிருந்தார். இது தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் பகிரங்கப்படுத்தப்படும்- என்றும் கூறினார். (ஐ)

# முட்டை விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, ஏப். 11

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சில தினங்களுக்கு முன்பு குறைக்கப்பட்டிருந்த முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

உள்ளூர் முட்டை ஒன்றின் விலை தற் போது 50 ரூபாயாகவும் சில்லறை விற்பனை விலை 55 ரூபாயாகவும் விற்பனை செய் யப்படுகின்றன.

மேலும் கடந்த சில நாட்களாக விலை குறைக்கப்பட்டிருந்த காய்கறி, மீன்களின் விலை நேற்று அதிகரித்திருந்தது. (ஐ)

## இலங்கையின் நம்...

ஒரு விருப்பம் மட்டுமல்ல. நமது அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்ற தொலைநோக்கு பார்வையால் வழிநடத்தப்படும் ஒரு தேவையாகும். எங்கள் வளர்ந்து வரும் திறன்கள் நமது அயல் நாடுகளுக்கு பயனளிக்க வேண்டும். இலங்கை ஆயுதப் படைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய நாம் உறுதியாக உள்ளோம். (ஐ)

## அமைதிவழி...

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளது. சட்டவிரோத - பல வந்த பிரயோகத்துக்குக் காரணமான அதிகாரிகளை நேரடி விசாரணைக்கு உட்படுத்தி சட்டத்தின் முன் நிறுத்தும் வரை இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பை அவசரமாக மீளாய்வு செய்யுமாறு சர்வதேச மன்னிப்பு சபை சர்வதேச சமூகத்திடமும் கோரியுள்ளது.

## நெடுந்தீவு...

தொழிற்சாலையின் செயல்பாடுகளை மீண்டும் ஆரம்பித்தல் என்பன முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

இதன்போது, நெடுந்தீவு பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல் மற்றும் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஐ)

## பேஸ்புக்...

எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், போலி பேஸ்புக் கணக்குகளை அகற்றுமாறு கோரி கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது தொடர்பில் கண்டறிய முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் சுமார் ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளின் படி பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையின்...

நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பொது நிதி மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுவோம் - என்றும் சல்லிவன் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (ஐ)

# கல்வி அமைச்சின் இணையத்தளத்தின் மீதான சைபர் தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை

கொழும்பு, ஏப். 11

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீதான சைபர் தாக்குதல் இந்த நாட்டில் உள்ள இணைய இணைப்பின் ஊடாக மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதனை யார் மேற்கொண்டார் என்பதை அடையாளம் காண சர்வதேச உதவி கோரப் பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இது தொடர்பான அனைத்து விபரங்களும் அடங்கிய அறிக்கை இன்று கல்வி அமைச்சிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை சைபர் தாக்குதலுக்கு உள்ளான கல்வி அமைச்சின் இணையத்தளம் இன்னும் செய லற்ற நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலை பிற்போட்டமைக்கு எதிராக மகிந்த தேசப்பிரிய வீட்டில் பதாதைகள்!




கொழும்பு, ஏப். 11

உள்ளூராட்சி தேர்தலை பிற்போடுவதற்கு எதிராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் தனது வீட்டின் முன்னால் பதாதைகளை காட்சிப்படுத்தியுள்ளார்.

“அரசாங்கத்தின் செல்வாக்கு காரணமாக வேட்புமனுக்களை கோரிய பின்னர் தேர்தல்களை பிற்போடுவதற்கு ஏதேச்சதிகாரத்துக்கு சமமானது” என்றும் அவர் கூறியுள்ளார்.

“மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளிற்கு பதில் அதிகாரிகள் நிர்வாகம் செய்வது பிரஜைகளின் உரிமையை மீறும் செயல்” என தனது வீட்டின் முன்னால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாதையில் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ)

# பரிசளிப்பு விழா!

வடமராட்சி, ஏப். 11

பருத்தித்துறை நகர சபை யின் உள்ளூராட்சி வார வாசிப்பு மாத பரிசளிப்பு விழா காலை 9 30 மணிக்கு நகர சபை சபா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நகர சபையின் செயலாளர் திருமதி தாரணி தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ. பிரணவநாதன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மோ. தெய்வேந்திரா ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-02)

# தயாரித்த வாகனத்தை செலுத்திய மாணவர்கள் இருவர் விபத்தில் காயம்!

கொழும்பு, ஏப். 11

கொழும்பு - பாதுக்கை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட தொழில்நுட்பக் கண்காட்சியில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட சிறிய வாகனத்தை செலுத்த முற்பட்ட இரு மாணவர்கள் விபத்தில் சிக்கிக் காயமடைந்து பாதுக்கை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு மாணவர்களில் ஒருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினாரெனவும் மற்றைய மாணவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் கூறப்பட்டது.

குறித்த பாடசாலையில் நடத்தப்பட்ட தொழில்நுட்பக் கண்காட்சிக்காக மாணவர்கள் சிலர் இணைந்து, முச்சக்கர வண்டியொன்றின் இன்ஜினை பயன்படுத்தி உருவாக்கிய சிறிய வாகனமொன்றினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பெரமுன உறுப்பினரையே தேர்தலில் களமிறக்குவோம்

## மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 11

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இயலுமானவரை ஒன்றிணைந்து செயற்படுவோம்.முடியாவிடின் விலகி விடுவோம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை களமிறக்கவே தீர்மானித்துள்ளோம். உத்தியோகபூர்வ அறிவிப்பை வெகுவிரைவில் வெளியிடுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு வருமாறு பதிலளித்தார்.

**கேள்வி** - புதிய அரசியல் கூட்டணிகள் ஸ்தாபிக்கப்படுகிறது,கூட்டணி தொடர்பில் நீங்கள் அவதானம் செலுத்தவில்லையா ?

**பதில்** - புதிய அரசியல் கூட்டணி குறித்து பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் வெகுவிரைவில் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி அமைக்கப்படும்.

**கேள்வி** - உங்களின் தாய் கட்சியான சுதந்திரக் கட்சி தீ பற்றி எரிகிறதே, பிரச்சினைகளுக்கு தீர்வு காண நீங்கள் ஆலோசனை வழங்க போவதில்லையா?

**பதில்** -சந்திரிக்கா அம்மணி வந்து தலைவர் மைத்திரியை விரட்டியடித்துள்ளார். தவறுகள் தற்போது திருத்திக் கொள்ளப்படுகின்றன. சுதந்திர கட்சி பல சவால்களை எதிர்கொண்டுள்ளது.

சுதந்திர கட்சியை கட்டியெழுப்பும் உரிமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு உண்டு.

**கேள்வி** - குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன எழுச்சிப் பெற்றதை போன்று சுதந்திர கட்சியும் எழுச்சி பெறும் என்று எதிர்பார்க்கின்றீர்களா ?

**பதில்** - நிச்சயமாக சுதந்திர கட்சி மீண்டும் எழுச்சிப் பெறும்.

**கேள்வி** - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுடன் இணக்கமாக செயற்படுகிறாரா ?

**பதில்**- இணக்கமாக செயற்படும் வரை இணைந்து பயணிப்போம் முடியாவிடின் விலகி விடுவோம்.

**கேள்வி** - பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க போவதில்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகிறாரே?

**பதில்** - அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு.கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம்-என்றார்.

(அ)

# 9 பொருள்களுக்கு விலை கட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 11

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் மக்கள் கொள்வனவு செய்யும் வகையில் ஒன்பது அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கோதுமை மா 189 ரூபாய் முதல் 208 ரூபாய் வரையிலும், பருப்பு 312 ரூபாய் முதல் 327 ரூபாய் வரையிலும் விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ 174 ரூபாய் முதல் 214 ரூபாய் வரையிலும், சீன வெங்காயம் ஒரு கிலோ 298 ரூபாய் முதல் 328 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சின்ன வெங்காயம் 349 ரூபாய் முதல் 384 ரூபாய் வரையும் தாய்லாந்து உலர் நெத்தலி கிலோ ஒன்று 869 முதல் 955 ரூபாய் வரையிலும் காய்ந்த மிளகாய் 818 ரூபாய் முதல் 859 வரையும் விற்பனை செய்யப்பட வேண்டும் என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் அறிவித்துள்ளது. (அ)

# சுன்னாகத்தில் காய்ச்சலால் 16 வயது மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

சுன்னாகம் பகுதியில் காய்ச்சல் காரணமாக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

16 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டதால் நேற்று முன்தினம் காலை யாழ். போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அன்றிரவே உயிரிழந்துள்ளார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இறப்பிற்கான காரணத்தை கண்டறிவதற்காக உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பொதுஜன பெரமுன வேட்பாளரை அறிவிக்கும் அதிகாரம் மகிந்தவுக்கு

கொழும்பு, ஏப். 11

பொதுஜன பெரமுன சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளரை அறிவிப்பதற்கான அதிகாரத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# இராமேஸ்வரம் மீனவர்களை கடற்படையினர் தாக்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் ஊடகப் பேச்சாளர்

கொழும்பு, ஏப். 11

கச்சதீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டதாக இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்கள் முன்வைத்த குற்றச்சாட்டை இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய மறுத்துள்ளார்.

கச்சதீவுக்கு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் தாக்கியதில் நான்கு இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்கள் காயமடைந்துள்ளதாக நேற்று முன் தினம் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு மறுத்துள்ளார்.

கடற்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கடற்பகுதி தொடர்பான ராடர் தகவல்கள் வழங்கப்படுமாயின் அதனை உறுதிப்படுத்த முடியும் என்றும் கடற்படை ஊடகப் பேச்சாளர், கப்டன் கயான் விக்ரமசூரிய மேலும் கூறினார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுகின்ற இந்திய கடற்றொழிலாளர்களை மீண்டும் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆனால் அதனை மீறிச் செயல்படுபவர்களாயின் கைது செய்வதாகவும் இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் அதிகாரம் கடற்படையினருக்கு இல்லை என அவர் தெரிவித்தார். (அ)

# சுவிஸிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர் குளியலறையில் விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 11

சுவிட்சர்லாந்திலிருந்து கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த ஒருவர் குளியலறையில் விழுந்து உயிரிழந்துள்ளார். பாலசிங்கம் உதயகுமார் (வயது 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் திங்கட்கிழமை சுவிஸிலிருந்து நவாலி தெற்கு, மானிப்பாய் பகுதியில் உள்ள தாயாரின் வீட்டுக்கு வந்திருந்தார். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை காலை குளியலறையில் குளிக்கச் சென்றவேளை கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (அ)

# தடை செய்த மோ. சைக்கிள் பாகங்களுடன் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 11

தடை செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளின் உதிரிப் பாகங்களுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூவர் முல்லேரியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் எனவும் பூகொடை பொலிஸ் நிலையத்தில் விசேட கடமைகளுக்காக நியமிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லேரியாவில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளின் உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் முள்ளியவளை இளைஞர் பலி!

முல்லைத்தீவு, ஏப். 11

முல்லைத்தீவு - முள்ளியவளை மாமூலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமூலை பகுதியில் நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.


முள்ளியவளை பூதன்வயல் பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ளதுடன் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மற்றுமொரு இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2 ஓட்டங்களால் பஞ்சாப்பை வீழ்த்தியது ஹைதராபாத்!




முல்தான்பூர், ஏப். 11

பஞ்சாப் மாநிலத்தின் முலான்பூர் மைதானத்தில் நடைபெற்ற நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தியது ஹைதராபாத் அணி.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 23ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தொடக்க வீரர்களாக ட்ராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா இருவரும் களமிறங்கினர். பஞ்சாப் வீரர் அர்ஷ்தீப் சிங் வீசிய 4ஆவது ஓவரில் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார் ஹெட். அதே ஓவரில் ஓட்டம் ஏதும் எடுக்காமல் மார்க்ரம் வெளியேறினார். அடுத்த ஓவரில் 16 ஓட்டங்கள் எடுத்திருந்த அபிஷேக் சர்மாவை வெளியேற்றினார் சாம் கரன்.

அடுத்து இறங்கிய நிதிஷ் குமார் ரெட்டி ஐந்து சிக்ஸர்கள், நான்கு பௌண்ட்ரிகள் என 64 ஓட்டங்கள் விளாசினார். தொடர்ந்து ராகுல் திரிபாதி 11 ஓட்டங்கள், ஹெய்ன்ரிச் கிளாசன் 9 ஓட்டங்கள், அப்துல் சமாது 25, ஷஹ்பாஸ் அஹமது 14, பேட் கம்மின்ஸ் 3, புவனேஸ்வர் குமார் 6, ஜெயதேவ் உனட்கட் 6 என மொத்தம் 20 ஓவர் முடிவில் 182 ஓட்டங்களை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி எடுத்திருந்தது.

அடுத்து 183 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணியின் ஓப்பனரான ஷிகர் தவான் 14 ஓட்டங்கள் எடுத்து பின்னர் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இன்னொரு புறம் ஓர் ஓட்டம்கூட எடுக்காமல் மூன்றாவது பந்திலேயே வெளியேறினார்.

பிரப்சிம்ரன் சிங் 4 ஓட்டங்கள், சாம் குரன் 29 ஓட்டங்கள், சிக்கந்தர் ரஸா 28, ஷஷாங்க் சிங் 46, ஜிதேஷ் சர்மா 19, அ/டோஷ் 33 என 20 ஓவர்களில் 180 ஓட்டங்கள் எடுத்து பஞ்சாப் அணி தோல்வி அடைந்தது. (ஐ)

# ஜெய்ஸ்வால் வலுவான மீளெழுச்சி கொடுப்பார்

## ராஜஸ்தான் பயிற்றுநர்

ஜெய்ப்பூர், ஏப். 11

இளம் தொடக்க ஆட்டக்காரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் வலுவான மீளெழுச்சி கொடுப்பார் என தாங்கள் நம்புவதாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உதவி பயிற்சியாளர் ட்ரெவர் பென்னி தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் நான்கு போட்டிகளில் விளையாடி 39 ஓட்டங்கள் மட்டுமே அவர் எடுத்துள்ளார்.

"ஜெய்ஸ்வாலின் அதிரடி மீள் எழுச்சி எதிரணிகளுக்கு சங்கடம் தரும் வகையில் அமையும். நாங்கள் நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளோம். வழக்கமாக அவரது துடுப்பிலிருந்து எங்களுக்கு கிடைக்கும் ஓட்டங்கள் கிடைக்கவில்லை. அவர் கடுமையாக பயிற்சி செய்து கொண்டு வருகிறார். சில நேரங்களில் இருபது - 20 கிரிக்கெட்டில் இது போல நடக்கும். அவரும் அதை உணர்ந்துள்ளார். நேர்மறை மனநிலையுடன் ஆட்டத்தை அணுகுகிறார். அவர் வலுவான மீளெழுச்சி கொடுப்பார் என நாங்கள் நம்புகிறோம் - என்றார். (ஐ)




# ஐ. பி. எல். தொடருக்கு வருகிறார் கொன்வே




வெலிங்டன், ஏப். 11

டெவன் கொன்வே ஐ. பி. எல். தொடரில் மீண்டும் சென்னை அணியில் பங்கேற்கவுள்ளார்.

10 அணிகள் பங்கேற்றுள்ள 17ஆவது ஐ. பி. எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.


இதில், நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இதுவரை 5 போட்டிகளில் விளையாடி 3 வெற்றிகள் மற்றும் 2 தோல்விகள் கண்டு புள்ளிப் பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடர் தொடங்குவதற்கு முன்னதாக சென்னை அணியின் முன்னணி தொடக்க ஆட்டக்காரரான டெவன் கொன்வே காயம் காரணமாக இந்த தொடரில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டது. கால் விரலில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அறுவை சிகிச்சைக்கு பின், அவர் குணமடைய குறைந்தது 8 வாரங்கள் ஆகலாம் என தகவல் வெளியாகியது. இதனால் அவர் ஐ. பி. எல். மட்டுமின்றி மே வரை எந்த வித போட்டிகளிலும் பங்கேற்காத சூழல் ஏற்பட்டது.

இந்நிலையில் தற்போது காயத்திலிருந்து குணமடைந்து வரும் அவர் மே மாத 2ஆவது வாரத்துக்குள் முழு உடல் தகுதியை எட்டிவிடுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வேளையில்தான் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பிளே ஓவ் சுற்று போட்டிகள் நடைபெறவுள்ளன. இதனால் ஒருவேளை சி. எஸ். கே. பிளே ஓவ் சுற்றை எட்டிவிட்டால் இவர் மீண்டும் சென்னை அணியுடன் இணைந்து விளையாடுவார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

# பாகிஸ்தான் அணியில் மீண்டும் முகமது ஆமிர்




லாகூர், ஏப். 11

எதிர்வரும் 18ஆ திகதி முதல் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் விளையாட உள்ளன. இந்நிலையில், இந்த தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இடது கை வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆமிர் இடம் பெற்றுள்ளார்.

கடந்த 2020இல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இந்தச் சூழலில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவருடன் பேச்சு நடத்திய நிலையில் ஓய்வு முடிவை கடந்த மார்ச் மாதம் பின்வாங்கிக் கொண்டார். இத்தகைய நிலையில் நியூசிலாந்து உடனான ரி - 20 தொடரில் அவர் விளையாடவுள்ளார். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக 36 டெஸ்ட், 61 ஒருநாள் மற்றும் 50 இருபது - 20 போட்டிகளில் விளையாடிய இடது கை வேகப்பந்து வீச்சாளர் தான் ஆமிர். மொத்தம் 259 சர்வதேச விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். சூதாட்ட முறைப்பாட்டில் சிக்கி 5 ஆண்டுகள் தடையை எதிர்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் இருபது - 20 உலகக் கிண்ணம் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் நடைபெற ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் மோசமான செயல்பாடு காரணமாக அணித் தலைவர் பொறுப்பில் இருந்து பாபர் அசாம் விலகினார். இந்த சூழலில் அவர் மீண்டும் பாகிஸ்தான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் இமாத் வாசிமும் சேர்க்கப்பட்டுள்ளார். அண்மையில் முடிந்த பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய உஸ்மான் கான், இர்ஃபான் கான் ஆகியோரும் நியூசிலாந்து இருபது - 20 தொடருக்கான அணியில் இடம் பெற்றுள்ளனர்.

(ஐ)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# எதிர்வரும் பிரிட்டன் தேர்தல்:

# தோல்வியை எதிர்நோக்கும் ரிஷி சுனக்!

## சொந்த தொகுதியிலே வெல்வது கஷ்டம்?

பிரிட்டன் நாட்டில் விரைவில் தேர்தல் நடக்கும் நிலையில், அங்கே ரிஷி சுனக் தலைமையிலான அரசு, மிக மோசமான தோல்வியை அடைய வாய்ப்பு இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் நாட்டில் இப்போது பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் இருக்கிறார். கோவிட்டின் பின் இக்கட்டான சூழலில் 2022இல் அவர் பிரதமர் பதவிக்கு வந்தார்.

எதிர்வரும் தேர்தலில், கன்சர்வேட்டிவ் கட்சியின் 15 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வரும் என கருத்துக்கணிப்பு முடிவுகளில் தகவல் வெளியாகியுள்ளது. பிரித்தானியாவின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி நடைபெறவுள்ள தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்திக்கும் என கூறப்படுகின்றது.

பிரித்தானியாவில் இவ்வாண்டு இறுதியில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு, என்பது குறித்து 'பெஸ்ட் (Best for Britain) நடத்திய மெகா கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரித்தானிய தேர்தல் தொடர்பில், சிவில் சமூக பிரச்சார அமைப்பான 'பெஸ்ட் ஃபார் பிரிட்டன்' நடத்திய மெகா கருத்துக் கணிப்பிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

**அடுத்த ஐந்தாண்டு ஆள்வது யார் ?**

தற்போது தேர்தல் நடத்தப்பட்டால், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி நாடு முழுவதும் 250 எம்.பி.க்களை இழக்க நேரிடும் என கூறப்படுகின்றது. ஆளும் கன்சர்வேடிவ் கட்சியைவிட, 19 புள்ளிகள் முன்னிலையுடன் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 45 சதவீத வாக்குகளை கணிப்பில் பெற்றுள்ளது. தொழிலாளர் கட்சியான எதிர்கட்சி 468 இடங்களை பெற்று வெற்றி பெறும் என்றும் அந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் காட்டுகிறது.



ஆயினும் பிரிட்டனில் அடுத்தாண்டு ஜனவரி மாதத்திற்கு முன்பு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரிட்டனை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஆளப்போவது யார் என்பதை தீர்மானிக்கும் தேர்தலாக இது அமைய உள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற கீழவையான ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் 650 உறுப்பினர்களை கொண்டது. அங்கு ஆட்சி அமைப்பதற்கு 326 இடங்களில் வெற்றிபெற வேண்டும். கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த தேர்தலில், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 365 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது.

ஆட்சியை பிடித்தாலும் பல சர்ச்சையில் சிக்கி மூன்று பிரதமர்களை மாற்றும் நிலைக்கு கன்சர்வேட்டிவ் கட்சி சென்றது. பாலியல் வழக்கில் சிக்கியவரை அரசாங்கத்தில் நியமித்தது, கொரோனா விதிகளை மீறியது என போரிஸ் ஜான்சனுக்கு எதிராக புகார் எழுந்த நிலையில், தனது பிரதமர் பதவியை அவர் ராஜினாமா செய்தார்.

போரிஸை தொடர்ந்து பிரதமர் பதவிக்கு வந்த லிஸ் டிரஸ், பொருளாதார நெருக்கடி காரணமாக பதவியேற்ற 6 வாரங்களில் பதவி விலகினார். இதையடுத்து, கடந்த 2022ஆம் ஆண்டு, பிரதமராக பொறுப்பேற்ற ரிஷி சுனக் பல சவால்களை கடந்து அந்த பதவியில் தொடர்ந்து வருகிறார்.

**கன்சர்வேட்டிவ் கட்சி பின்னடைவு:**

தற்போது பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு கடுமையான பின்னடைவு ஏற்படும் என்றும் தெரியவந்துள்ளது. தற்போதய அமைச்சரவையில் உள்ள 28 பேர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு போட்டியிடுவார்களாயின், அவர்களில் 13 பேர் மட்டுமே மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என கத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.




**கருத்துக்கணிப்பு முடிவுகள் உண்மையாகும் பட்சத்தில், கடந்த 27 ஆண்டுகளில் சந்திக்காத மோசமான தோல்வியை ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி சந்திக்க போகிறது. இதில் ஆளும் தரப்புக்கு மற்றொரு அதிர்ச்சி தரும் செய்தி என்னவென்றால் பிரதமராக இருக்கும் ரிஷி சுனக் கூட அவரது சொந்த தொகுதியில் வெல்வது கஷ்டம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கிடையே பிரிட்டன் நாடு முழுக்க நடத்தப்பட்ட புதிய கருத்துக் கணிப்பு முடிவுகள் ஆளும் தரப்பை ஆட்டம் காண வைப்பதாக இருக்கிறது. இந்தாண்டு இறுதியில் அங்கே நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வி அடையும் என்றே அந்த கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.



**சொந்த தொகுதியில் வெல்வது கஷ்டம்:**

இதில் ஆளும் தரப்புக்கு மற்றொரு அதிர்ச்சி தரும் செய்தி என்னவென்றால் பிரதமராக இருக்கும் ரிஷி சுனக் கூட அவரது றிச்மண்ட் வடக்கு யார்க்ஷயரின் தொகுதியில் வெல்வது கஷ்டமாம். இந்த கணிப்பு படி எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தொழிலாளர் கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகமாக இருக்கிறது.

இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தொழிலாளர் கட்சி 468 இடங்களில் வெல்ல வாய்ப்பு உள்ளது



டன், ரிஷி சுனக் தலைமையில் தேர்தலை எதிர்கொள்ளப் போகும் கன்சர்வேடிவ் கட்சி வரலாறு காணாத படுதோல்வியைச் சந்திக்க இருக்கிறது. அவர்கள் 100க்கும் குறைவான இடங்களில் மட்டுமே வெல்ல வாய்ப்பு இருப்பதாக இன்னோர் கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த கருத்துக் கணிப்பில், இப்போது தேர்தல் நடத்தப்பட்டால், சுனக்கின் கன்சர்வேடிவ் கட்சி நாடு முழுவதும் மிக மோசமான தோல்வியை அடையும். தொழிலாளர் கட்சி 468 இடங்களைப் பெற்று வெற்றி பெறும் ஒரு பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி இதுவரை இப்படியொரு தோல்வியைச் சந்தித்ததே இல்லை.

அத்துடன் கன்சர்வேடிவ் கட்சியின் மோசமான நிலை அத்துடன் நிற்கவில்லை. பிரதமராக உள்ள ரிஷி சுனக்கின் ரிச்மண்ட் தொகுதியில் கூட போட்டி மிக மிக நெருக்கமாக இருக்கிறது. அங்கே தொழிலாளர் கட்சி ரிஷி சுனக்கை விட வெறும் 2.4 சதவீதம் தான் பின்தங்கிய இருக்கிறது. எனவே, அங்கே எப்போது வேண்டுமானாலும் நிலைமை மாறலாம் எனக் கூறப்படுகிறது.

**உள்ளாட்சி தேர்தல் படுதோல்வி:**

பிரிட்டனில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வி அடைந்தது. இது ரிஷி சுனக்கிற்கு பெரும் ஆபத்தைக் கொடுத்துள்ளது. இதனால் கன்சர்வேடிவ் கட்சிக்குள்ளேயே ரிஷி சுனக்கிற்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளது. வரும் காலங்களில் நிலைமை மோசமாகலாம் என்பது அவர்கள் நிலைப்பாடு.

இதனால் ரிஷி சுனக்கை அவர்கள் மிகக் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். மேலும், அடுத்த முறை நிச்சயம் ரிஷி சுனக்கிற்கு வாய்ப்பே இருக்காது என்பதே வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது.

தேர்தலுக்கு முன்பாகவே கூட நம்பிக்கை இல்லாத தீர்மானத்தைக் கொண்டு வந்து அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்கவும் வாய்ப்புகள் அதிகம் என்று கூறப்படுகிறது.

**தொழிலாளர் கட்சி சாதனை படைக்குமா?**

இன்னோர் கருத்துக் கணிப்பு அமைப்பான 'யூகோவ் நிறுவனம்' எடுத்த ஆய்வின் முடிவுகளின்படி, மொத்தமுள்ள 650 இடங்களில் 403 இடங்களை கைப்பற்றி தொழிலாளர் கட்சி சாதனை படைக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 18,000 பேரிடம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி, ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி 155 இடங்களில் மட்டுமே வெற்றி பெறும் கூறப்பட்டுள்ளது.



இந்த கருத்துக்கணிப்பு முடிவுகள் உண்மையாகும் பட்சத்தில், கடந்த 27 ஆண்டுகளில் சந்திக்காத மோசமான தோல்வியை கன்சர்வேட்டிவ் கட்சி சந்திக்க போகிறது. கடந்த 1997ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் டோனி பிளேயர் தலைமையிலான தொழிலாளர் கட்சி மாபெரும் வெற்றியை பதிவு செய்தது.

அந்த தேர்தலில், கன்சர்வேட்டிவ் கட்சி 165 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. ஆட்சியை இழப்பதோடு கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த மூத்த தலைவர்கள் பலர் இம்முறை தோல்வியை சந்திக்க உள்ளனர் என கருத்துக்கணிப்பு முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் நிதியமைச்சர் ஜெரோம் ஹன்ட், அறிவியல் துறை அமைச்சர் மைக்கேல் டோனலன், வீட்டு வசதித் துறை அமைச்சர் மைக்கேல் கோவ் உள்ளிட்டோர் தோல்வியை சந்திக்கக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் கன்சர்வேட்டிவ் குழு தலைவராக பதவி வகித்து வரும் பென்னி மோர்டான்ட், முன்னாள் அமைச்சர் ஜேக்கப் ரீஸ் மோக் ஆகியோரும் தோல்வி அடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிட்னியில் சிலை எடுத்த சீமான் குணரெட்ணம்

இலங்கைக்கு வெளியே முதல் தடவையாக உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு அவுஸ்திரேலியா மண்ணில் சிட்னி மாநகரில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அந்த சிலையை நிறுவியவர் காரைதீவைச்சேர்ந்த சீமான் நாகமணி குணரட்ணம் அவர்கள்.

சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகரும், அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் கௌரவ போஷகரும், சமூக செயற்பாட்டாளருமான திரு. நாகமணி குணரெட்ணம் அவர்களுடைய முழு முயற்சியின் பேரில் சுவாமி விபுலானந்த அடிகளார் திருவுருவச் சிலை அங்கு நிறுவப்பட்டுள்ளது.

இதனை சுபநேரத்தில் சிலைநிறுவுனர் திரு திருமதி குணரெத்தினம் மனோன்மணி தம்பதியினர் மங்கலபேரிகைகள் முழங்க, திரைநீக்கம் செய்து மாலை சூட்டி நெற்றித்திலகமிட்டு திறந்து வைத்தனர்.

திரைநீக்க நிகழ்வில், பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியலாளர் பெருமக்களின் பங்கேற்போடும் அவை நிறைந்த மக்கள் கூட்டத்தோடு வெகு சிறப்பாக இடம் பெற்றமை தெரிந்ததே.

அவரிடம் சிட்னிக்கு சிலை வந்த கதையை கேட்டபோது அவர் இவ்வாறு கூறுகிறார்:

ஏழைகளின் தோழனாக அன்று காமராசர் விளங்கினார். காமராசருக்கு சிலை எடுக்கப்பட்ட பொழுது என்னுள்ள ஒரு சிந்தனை எழுந்தது அதேபோன்று பல சேவைகளை சாதனைகளை செய்த எமது ஊர் பிறந்த முத்தமிழ் வித்தகனுக்கு ஒரு சிலை எடுக்கக் கூடாதா? என்ற சிந்தனை பிறந்தது.

எதிர்காலத்தில் புலம்பெயர் நாடுகளில் வாழும் சந்ததியினர் சுவாமி விபுலானந்த அடிகளாரை யார் என்று கேட்டு விடக்கூடாது என்று நோக்கில் சிலைநிறுவும் பணியை மேற்கொண்டேன்.

அதன் பலனாக 2019 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு சென்று புதுக்கோட்டை மற்றும் திருப்பூரிலே சிலை செய்து எடுப்பதற்காக சென்றேன். அங்கு கற் சிலையை காட்டினார்கள். என்னைப் பொறுத்தவரையிலே வெண்கலச் சிலை எடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்காக ஆரம்பத்திலேயே 3200 டாலரை அட்வான்ஸ் ஆக கொடுத்துவிட்டு திரும்பி இருந்தேன். போக்குவரத்துக்காகவும் துறைமுகச்செலவுக்காகவும் 1000 டொலரை வழங்கி விட்டு வந்தேன்.

சிலை வரவில்லை. ஒன்றரைமாத காலமாக அந்த சிலை வரவில்லை. பின்பு விசாரித்த பொழுது அங்கு துறைமுகத்தில் அது தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது.

ஏனென்றால் சிலைகள் கடத்தப்படுகின்ற காலம் அது. இந்த சிலை எந்த நோக்கத்தில் இருக்கின்றதோ தெரியாது என்பதனால் அதை தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்ற செய்தி கிடைத்தது.

உடனே நான் மீண்டும் அங்கு சென்று அங்கு உள்ளவர்களை சந்தித்து சுங்கப் பகுதியினடம் இதற்கான அனுமதியை பெற்று அதனை அவுஸ்திரேலியா கொண்டு வந்து சேர்த்தேன்.

அந்த சிலையின் எடை 58 கிலோகிராம். அங்கு செய்ததற்கு 32,000 டொலர் பிடித்தது. ஆனால் இதே சிலையை அவுஸ்திரேலியாவில் செய்வதானால் 27000 டொலர் பிடித்து இருக்கும். அதாவது கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் பிடித்திருக்கும்.

ஆக 2020ல் சிட்னிக்கு அந்த சிலை வந்து சேர்ந்தது.

அதனை நிறுவுவதற்கு நான் பொதுவிலேயே பகிரங்கமாக அறிவித்தேன்.

சிலை திறப்பு விழா நடைபெற இருக்கின்றது. கடல் கடந்த நாடுகளில் இருப்பவர்கள் விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று. அந்த வகையில் தான் முதன்முதலில் காரரைதீவைச் சேர்ந்த தம்பி சகாதேவராஜா மற்றும் மகேந்திரன் ஆகியோர் என்னிடம் பேசினார்கள். நல்ல பணி என்று வாழ்த்து தெரிவித்தார்கள்.

அன்றிலிருந்து தொடங்கிய ஒரு இலட்சிய கனவுதான் இப்போது நனவாகி இருந்தது. இங்கே கிட்டத்தட்ட




இந்த சிலை அமைப்புக்கு இந்த விழாவுக்கும் சேர்த்து 52,000 டாலர் செலவாகி இருந்தது கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவாகியது.

இதேவேளை சிட்னி முருகன் ஆலயத்திற்கு 3000 டொலர் பெறுமதியான பின்னால் இயங்கும் மேளதாள மணியை வாங்கி வழங்கினேன். அங்கு அவர்கள் அந்த சத்தத்தை ஏனையவர்கள் கேட்பதில் உள்ள சட்டப் பிரச்னைகள் தொடர்பாக கூறினார்கள். அதனை அடுத்து அதனை நான் காரைதீவு கந்தசுவாமி ஆலயத்திற்கு வழங்கியிருந்தேன்.

சுவாமி விபுலானந்தரின் சிலைக்கான பீடம் அமைப்பதற்கு 1400 டொலர் செலவில் அமைத்திருந்தேன். மொத்தத்திலே தனியாளாக நின்று சிட்னியில் சிலை திறப்பு விழாவை நடாத்தி சிறப்பு மலரை வெளியிட்டேன்.

கடல் கடந்த நாடுகளிலே முதலாவதாக இதனை இங்கு நிறுவியமை எனக்கு சந்தோசமாக இருக்கின்றது பெருமையாகவும் இருக்கின்றது. இதைத் தொடர்ந்து கனடாவிலும் மலேசியாவிலும் சுவாமியின் சிலை நிறுவுவதற்கு அங்கிருந்து வந்தவர்கள் எனக்கு ஒப்புதல் தந்திருக்கின்றார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் அதனை செய்வதற்கு நன்றிகள்.

**- விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா (காரைதீவு)**

# பாரிஸ் நகரில் பெண் மீதான தாக்குதல்: ஒரு சமூகம் மீதான மதிப்பீட்டுக்கு பாதிப்பு!

**சிவா முருகுப்பிள்ளை**

ஒரு சமூகத்தை பற்றிய மதிப்பீடு பொதுவெளியல் அதன் செயற்பாடுகள், வெளிப்பாடுகளின் அடிப்படையில் மற்றைய சமூகங்களினால் அதிகம் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இது ஒரு இனத்திற்கு தேசத்திற்கு நாட்டிற்கு என்றவாறு வரிவடைந்து செல்லும்.

அதுவும் உலகம் இணைத் தளங்களால் இலத்திரனியல் ஊடகங்களால் சமூக வலைத்தளங்களால் கணத்திற்கு கணம் வேகமாக இணைக்கப்படும் வேக விச்சுக் காலத்தில் இதற்கான எதிர்வினைகள் மதிப்பீடுகள் அதிகம் உடனடியாக பொது வெளியில் பரவுவதற்கு அதிக சாத்தியப்பாடுகள் உள்ள காலத்தில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும்.

கூடவே ஒலி ஒளி ஊடகங்களில் பொது வெளியில் போட்டவை. இணைக்கப்பட்டவை திருப்பிப் பொறுக்க முடியாத அளவிற்கு அவை ஆவணமாகவும் ஆக்கப்பட்டும்விடும்.

ஒவ்வொரு தனி மனிதனும் சமூகமும் இனமும் தேசமும் தான் சார்ந்த சமூகத்தின் இனத்தின் நாட்டின் நற்பெயரைக் காப்பாற்றும் செயற்பாடுகளில் பொதுவெளியில் நிச்சயம் செயற்பட்டாக வேண்டும்.

இதன் அர்த்தம் தன் வீட்டிற்குள் தனிமனித ஒழுக்கமாக அவை இருக்கக் கூடாது என்பதாக அல்ல.

அண்மையில் ஐரோபிய நாடு ஒன்றில் (தமிழ்)பெண் ஒருத்திக்கு எதிராக இளைஞர்கள் பொது வெளியில் கூடி செயற்பட்ட எதிர்ப்புச் செயற்பாடுகளின் மதிப்பீடும் இவ்வாறுதான் பிற சமூகங்களால் பார்க்கப்படும்.

அவர் (ள்) ஏலவே.? பேசிய பேச்சிற்கு இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நியாப்பாடுகளில் சரியும் இருக்கலாம் பிழையும் இருக்கலாம் உண்மைகளும் இருக்கலாம் பொய்களும் இருக்கலாம்.

ஆனால் இதற்கான எதிர் வினையாற்றும் உரிமை கருத்துக்களை கருத்துகளால் சந்திக்கும் அணுகு முறையால் மட்டும்தான் செய்ய முடியும் அது எந்த வகையிலும் தாக்குதலுக்கு அண்மித்ததான செயற்பாட்டைக் கொண்டிருக்க முடியாது.

அதுவும் பலரும் கூடும் பொதுவெளில் பல தேசிய இனங்களும் கூடும் சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் நடைமுறை உள்ள தேசம் ஒன்றில்.

இதன் அர்த்தம் இதனை ஒரு தனி அறையில் செய்யலாம் என்பதல்ல.

இதற்கும் அப்பால் தவறுகளை தவறுகளால் சந்தித்தல், அடித்தல் என்ற அணுகு முறை எப்போதும் பிழையானது.

தவறுகளையும் சரியால் அடிக்கும் அணுகு முறையே அந்த சமூகத்தின் முன்னிலை தன்மையை எடுத்துக் கூறி நாகரீக உலகில் நாம் காட்டுமிராண்டிச் செயற்பாட்டை மறுதலிப்பவர்கள் நாகரீக மனிதர்களாக மாற்றமடைந்த சமூகத்தின் பிரதிநிதிகள் என்பதை நிறுவி நிற்க உதவும்.

இதற்கும் அப்பால் சரி தவறை தீர்மானித்து அதனை கையில் எடுத்து தண்டனை வழங்கும் சுயமான செயல்பாடுகள் நாம் வாழும் மேற்குலக நாடுகளில் ஏற்புடையதா.? என்பதை நான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இலங்கை போன்ற நாடுகளிலும் இது போன்ற செயல்பாடுகளை நாம் ஏற்கவில்லை.

இதன் வெளிப்பாடுதான் சில மாதங்களின் முன்பு தனது கருத்துரையை வழங்க வந்த பெண் ஒருவரை யாழ் பல்கலைக் கழக சமூகம் தடுத்து வாய்ப்பு அளிக்காமல் தடுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகும்.

இதனை ஒரு வேற்று இனத்தவர் நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமானது என்பதாகவே முதற் பார்வையில் தனக்குள் நிறுத்திக் கொள்வார்.

அதுவும் உலகில் பால் இன ஒடுக்கப்படும் பெண் என்பதாக அவர் இருக்கும் இடத்து இயல்பாக ஒடுக்குமுறைக்கு அதிகம் உள்ளாகும் பெண் என்பதான பார்வையும் அவர் மீதான் ஆதரவுத்தளத்தை அனுதாபத்தை பொதுவெளில் ஒரு பொது மகனிடம் அதிகம் ஏற்படுத்தும்.

மக்களுக்கு தண்டனை வழங்குவதை குழுவாக ஒரு சிலர் எடுத்து அதனை கேள்வியிற்கு உள்படுத்த முடியாது என்ற சூழலாக வளர்ந்து வந்து இறுதியில் தோல்வியில் முடிந்தளவிற்கு மாறியதே இந்த கேள்வி கேட்தலை மறுதலிக்கும் செயற்பாடுகளின் வளர்ச்சியே.

நான் எதனைக் கூறுகின்றேன் என்பதை நாம் யாவரும் புரிவோம். எனவே அதற்குள் அதிகம் தற்போது போக விரும்பவில்லை.

அவர் எவ்வகையான தவறுதலான வார்த்தை பிரயோகங்களை கொண்டிருந்தாலும் சமூகமாக அவர் நிராகரிப்பது அல்லது விமர்சிப்பது ஏற்பது என்பதான செயல்பாடே அவர் தன்னிலைய புரிந்து கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும்.

இதுவே ஒருவரிடம் தவறுகள் தொடருமாயின் அவர் சமூகத்தில் இருந்து தனிமைப்படுவதற்கு வாய்ப்புக்களை அளிக்கும். இதுதான் தவறு விடும் ஒருவருக்கான அதி உச்ச தண்டனையாகவும் அமையும்.

மாறாக இந்த ‘கூழ் முட்டை’ச் செயற்பாடுகள் தவறை தவாறல் அடிக்கும் வன்முறையாளர்கள் பண்பற்றவர்கள் நாங்கள் என்பதையே அதிகம் பொதுவெளியில் எடுத்தியம்பி நிற்கும். இதனை உணர்வதற்கு நிதானமும் அமைதியான சிந்தனையும் அவசியம்.

இந்த கூழ் முட்டை தண்டனை கன்னத்தில் அடிக்கும் செயபாடுகள் தனிநபர் விசுவாச அடிப்படையில் அவரை தவறாக குறைவாக கூறலாமா என்று தனிநபர் வணக்கத்தை தூக்கிப் பிடிப்பவர்களுக்கு இதனை பரிமாறுவதனால் அவர்களுக்கு புழகாங்கிதத்தை ஏற்படுத்தலாம்.

அதுதான் சமூக வலைத்தளங்கள் ரிக்ரொக் இன்ஸ்ரகிராம் முகநூல் என்று பறந்தாலும் இறுதியில் நாம் சார்ந்த சமூகத்திற்கு இவை பெருமை சேர்த்து இருக்கின்றதா என்றால் இல்லை என்பதே பதிலாக அமையும்.

நாகரீமான உயிரினமாக விலங்குகளில் இருந்து வளர்ச்சியடைந்து வேறுபட்டு இருக்கும் மனித குலம் தனது நாகரீகமான அணுகுமுறை இரு தரப்பும் கைக் கொள்வதே சாலச் சிறந்தது ஆகும்.